MADRAS.

# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி III } ஸாதாரணஹு கார்த்திகைமீ 1910-ஹு டிசம்பர்மீ { பகுதி 6

## ஆக்ரஹம்
## INDIGNATION

அவமதிப்பையாவது அல்லது வேறு எந்தத்தீங்கையாவது ஒருவன் தனக்குச்செய்யுங்காலத்தில்தன் மனத்தில் அவன்விஷயமாகஉண்டாகும் பரபரப்பும், கொடியவர்கள் பொதுவாகச்செய்யும் தீச்செயல்களைக்கண்ணுறுங்காலத்தில்நல்லோருக்குஉண்டாகும் பரபரப்பும், பிறர் வாழ்ந்து ஸுகிப்பதைக் கண்டு பொறுக்காது அவர்களுக்கு எப்படியாவது தீங்கு இழைத்துத் தமது நிலைக்குச்சரியாக அவர்களைக் கொண்டுவந்து திருப்தி அடையவேண்டும் என்ற பரபரப்பும் ஆக்ரஹம் என்ற பதப்பொருளுள் அடங்கும். ஆதலால் ஒருவன் தன் மனத்திற்கு இசையாத விஷயங்களைக் கண்ணுறுங் காலத்தில், அவன் மனத்திலுண்டாகி அவனை ஓர்விதத் தொழில் செய்யும்படித் தூண்டுந் தாபத்திற்கே ஆக்ரஹம் என்று பெயர். பிறருடைய கெட்ட செயல்களைக் காணும் பெரியோர்களுக்கு அதைக் குறித்து உண்டாகும் தாபத்திற்கு ஸத் ஆக்ரஹம் அல்லது வெறுப்பு என்று பெயர். தன் விஷயமாக ஏற்படும் கேடுகளோடு ஸம்பந்தப் பட்டும், பிறர் சிறப்பைக் கண்டு ஏற்படும் பொறாமையோடு ஸம்பந்தப் பட்டும் உண்டாகும் தாபத்திற்குத் துர் ஆக்ரஹம் என்று பெயர். மோக்ஷ மார்க்கத்தில் பாடுபட எண்ணும் முமுக்ஷுக்கள் இந்தத் துர்ஆக்ரஹத்திற்குஎப்பொழுதும் இடங் கொடுக்கலாகாது.

ஸத் ஆக்ரஹம் ஸாதாரணமாகக்கொடியவர் செய்யும் கொடுமையைப்பார்க்குங்கால்உண்டாவது. சிற்சிலகொடியவர்களுக்கு, உலகில்ஸாதாரணமாக ஏற்படும் சீர்சிறப்பைக்கண்ணுறுங்கால் இது உண்டாகலாம். இந்தஸமயத்தில் இதைத் துராக்ரஹமோ அல்லதுஸதாக்ரஹமோ என்று பகுத்தறிவது மிகக் கஷ்டம். ஆதலாற்றான் எவ்வித ஆக்கிரஹத்திற்கும் முமுக்ஷுக்கள் இடங்கொடுக்கலாகாது என்று நமது சாஸ்திரங்கள் கூறும். கொடியவர்கள் சிறப்பைக் காணுங்கால் பொறாமைக்கு இடங்கொடாது 'ஐயோ! இவர்கள் உலகச்சிறப்பில் அகப்பட்டு நல்வழிக்கு வந்து கரையேற வழியறியாது தத்தளிக்கின்றனரே! இம்மாதிரியான சீருஞ் சிறப்பும் எனக்கு ஒருக்காலும் வரலாகாது, பகவானே!' என்று அவர்கள் நிலைக்கு இரங்கி மனதை முற்கூறிய ஆக்ரஹத்திற்கு ஈடுபடுத்தாது இருக்கவேண்டும். கொடியவர்களது தீச்செயல்களால் ஏற்படும் ஸத் ஆக்ரஹம் ஒவ்வொரு முமுக்ஷுவினிடத்திலும் இருத்தல் வேண்டும். இல்லாவிடில் தீச்செயல்களைக் கண்டு ஸஹிக்கும் சக்தி ஏற்பட முடிவில் அவைகளில் இவனும் மூழ்குங் காலம் வந்துவிடும்' இதைத்தடுக்க இந்த வெறுப்பு அவசியம். ஆனால் இது தீச்செயல்களில் மாத்திரம் இருக்க வேண்டுமேயொழிய அதைச் செய்யுங் கொடியவர் மேல் பாய்ந்து, அவர்களைக் கண்டால் வெறுப்பது முதலியசெய்கைரூபமாக இருக்கவே கூடாது. இப்படி இருந்தால் இது பொறாமை முதலியவைகளுக்கு இடம் கொடுத்துக் கொடிய நிலையில் ஒருவனைக் கொண்டு செலுத்திவிடும். முற்கூறியபடித் தீச்செயல் மாத்திரத்தில் இந்த ஆக்ரஹம் இருந்தால், முமுக்ஷுவைக் கொடியவைகளில் நுழையவொட்டாது தடுப்பதோடு வீண்பொறாமையும் வந்து அணுகவொட்டாது காக்கும். ஆதலால் ஒவ்வொருவரும் தீயவழிகளை வெறுத்து, அவைகளுக்கு ஆளாகி இருப்பவர் எந்நிலையிலிருப்பினும் அவர்களுக்கு இரங்கித்தமது மனதை ஸரியானநிலையில் நிறுத்த வேண்டும்.

இந்த ஆக்ரஹம் கூட ஓர்விதமான மனச்சஞ்சலமாதலின் முமுக்ஷு நிஷ்டையில் முதிர்ச்சியடைய அதையும் விட்டுவிட முயலவேண்டும். பார்த்தவிடமெல்லாம் பரவெளியாகத் தோன்றும் இப்பிரபஞ்சத்தில் வெறுக்கத்தக்கது எது? ஆதலால் மனம் பரம்பொருளில் ஈடுபடப்பட இந்தத் தீயவழி வெறுத்தல் என்ற ஸத் ஆக்ரஹம் ஒளி மழுங்கிக் கொண்டே வந்து முடிவில் நஷ்டமாகிவிடும். ஆதலால் உலகிலுள்ள தீயவைகளைக் காணும்பொழுது மனங்கலங்காது செய்ய வேண்டியவைகளைச்செய்து எவ்வித ஆக்ரஹமும் மனத்தின்கண் வரப்பெறாது இருப்பர் பெரியோர். அவ்வாறேநாமும் நமது மனத்தை நடுநிலையில் நிறுத்திப் பழக்கவேண்டும்.

# விவேக போதினி

தொகுதி 3] ஸாதாரண௵ கார்த்திகைமீ [பகுதி 6


## முக்கிய உபநிஷத்துக்கள்

### THE PRINCIPAL UPANISHADS

### தைத்திரீய உபநிஷத் (2)

### THE TAYTTIRIYA UPANISHAD (2)

முன்னர்கூறப்பட்டவல்லியில் ஒருவனுக்கு நடக்கைகளும் உபாஸனைகளும் இவ்வாறிருந்தால் ஞானம்பெற அவன் தகுந்தவனுவன் என்பதையும், திரிசங்கு ரிஷியால் கண்டறியப்பட்டதும், அவன் அவசியம் தியானம் செய்ய வேண்டியதுமான பரம மந்திரத்தையும் எடுத்துக் கூறி, இவ்வுபநிஷத் இரண்டாம் வல்லியில் பரம்பொருளைப்பற்றி வெளியிடத் தொடங்குகின்றது.

II பிரஹ்மானந்த வல்லி,—பிரஹ்மத்தை உணருபவனே பரமபதம் எய்துபவன். இந்தப் பிரஹ்மம் ஸத்யம் ஞானம் அனந்தம். இது குஹைபோன்ற ரஹஸ்யஸ்தானமாகிய புத்தியுள் இருப்பது. இவ்வாறு உணருபவன் அந்தப் பிரஹ்மத்துடன் திருப்தி அடைவான். (ஆசைகள் முடிந்துவிடும்). இதிலிருந்துதான், ஆத்மா, ஆகாசம், வாயு, தேஜஸ், அப்பு, பிருதிவி, செடி கொடி வர்க்கங்கள், அன்னம், புருஷன் என்னும் இவைகள் முறையே உண்டாகின்றன. இப்புருஷன் அன்னத்தின் மாறுபாடே. இந்த அன்னத்தாலாகிய தேஹத்துள் போகப்போக அதி ஸூக்ஷ்மமான கோசங்கள் (கூடுகள்) இருக்கின்றன. அவைகளுக்குப் பக்ஷிக்கு இருப்பதுபோலத் தலை, சிறகு, உடல், வால் முதலியன காணப்படும். அவைகளின் விவரம் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

இந்த அட்டவணையுள் இரண்டொருவிஷயங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை. பிராணமய கோசத்தின் வால் தான் பூமி என்னப்படுவது. இது பூமி தேவதை; இதன் சக்தியால்தான் வாயுக்கள் பரந்து போகாமல் தேஹத்தில் தரித்து நிற்கின்றன. இங்குப் பூமிக்கு உதான வாயு என்று பெரியோர் பொருள் செய்வர். ஒவ்வொரு கோசமும் முந்தியதற்கு ஆத்மா என்று கூறப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிற்கும் வால் இன்னது என்று கூறுங்காலத்தில் உபநிஷத்து இது இந்தக்கோசத்திற்கு ஆதாரம் என்றும் கூறுகிறது. இம்மாதிரி கூறி வருகையில் ஆனந்தமய

| கோசங்கள் | தலை | வலச் சிறகு | இடச் சிறகு | உடல் | வால் | த்யான பலன் |
|---|---|---|---|---|---|---|
| அன்னமயம் | தலை | வலதுகை | இடதுகை | வயிறு | தொப்புளுக்குக் கீழ்ப்பாகம் | அன்னம் முதலிய விஷயங்களுக்குக் குறைவு வராது. |
| பிராணமயம் | பிராணன் | வியானன் | அபானன் | ஸமானன் | பூமி உதானன் | தீர்க்க ஆயுஸ் உண்டாகும். |
| மனோமயம் | யஜுஸ் | ருக் | ஸாமம் | பிராஹ்மணங்கள் | அதர்வ வேதம் | பயங்கள் நிவிர்த்தியாகும். |
| விஞ்ஞானமயம் | சிரத்தை | நேர்மை | ஸத்யம் | யோகம் | மஹத் | கார்யஸித்தி உண்டாகும், பாபம் நீங்கும். |
| ஆனந்தமயம் | பிரியம் | மோதம் | பிரமோதம் | ஆனந்தம் | பிரஹ்மம் | உண்மை விளங்கும் ஸ்திரத்வம் ஏற்படும் |

கோசத்திற்கு வரும்பொழுது பிரஹ்மமே ஆதாரம் என்று குறிக்கின்றது. இதனால் பிரஹ்மம் ஆனந்தமய கோசத்தைச் சேர்ந்ததெனச் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர். இதற்கும் அப்பாற்பட்டுக் கோசங்களை விட வேறானதாகப் பரம்பொருள் ஒன்றுண்டு அதன் உருவமே இவ்வானந்தமய கோசத்தில் சொல்லப்பட்ட பிரஹ்மமாகிய வால், இது பிரபஞ்ச காரணம்; 'மனம் வாக்காகிய இவை எவ்வளவு சென்றுசென்று தோய்ந்தும் அளவிட முடியாது யத்னம் வீணாகி திரும்பிச் சோர்ந்து வரும்படியாக இருக்கும் ஓர் வஸ்துவுண்டு, அதுதான் பரம்பொருள்' என்ற உபநிஷத்திற்கேற்ப வேறு சிலர் அபிப்பிராயப் படுகின்றனர். இதற்கேற்பவே இவ்வுபநிஷத்தும் கோசவிவரண முடிவில் 'பிரஹ்மத்திற்கு இருப்பு இல்லை என்று உணர்பவன் இருப்பு இல்லாதவனாவான். அது உண்டு என்றால் தான் ஒருவனுக்கு இருப்பு உண்டு' என்று கூறிப் பிரஹ்மத்தைத் தனித்திருப்பதாகவும் அதை உணர்த்துவதற்கே கோசங்களை விவரித்ததாகவும் குறிப்பாகக் காட்டுகின்றது.

எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பது பரம்பொருளாதலால் முற்கூறியவைகளை உணராதவன் இறந்தபின் பரமபதம் பெறுவனோ அல்லது உணர்ந்தவர்கள் மாத்திரம் பெறுவரோ? என்றகேள்வியை இவ்வுபநிஷத்து எடுத்துக் கொள்ளுகிறது. இதற்கு விடையாக பின்வரும் விஷயங்களைப் பிரஸ்தாபிக்கின்றது. பரம்பொருள், 'நான் அநேகமாக வேண்டும், நான் வெளிப்பட வேண்டும்' என்று இச்சித்துத் தவஞ்செய்தது' அதாவது ஊன்றி யோசித்தது. இதிலிருந்து ஸ்ருஷ்டி உண்டாயிற்று. ஸ்ருஷ்டிக்கப்பட்டவைகளுள் பரம்பொருள் புகுந்து கொண்டது; இது தான் ஹ்ருதய குஹையுள் காணப்படுவது. இவ்வாறானதும் பரம்பொருள் ஸகலவித த்வந்த்வங்களுக்கும் காரணமாகிப் பிரபஞ்ச மயமாயிற்று. இவ்வாறான பரம்பொருளே ஸத்தியவஸ்து. ஆதியில் இப்பொழுதிருப்பது போல ஒன்றும் இல்லாதிருந்தது. பரம்பொருள் தன்னாலேயே தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. இதனால் இதற்கு ஸ்வயம்பு என்று பெயர் வந்தது. இதுவே ஸுகிருதம். இதுதான் ஸகல வஸ்துக்களின் ஸாரமும். இதை அடைந்தவர்கள் கிருதார்த்தர்கள். இவ்வித ஸாரமாயுள்ள ஆனந்தம் ஹிருதய குஹையில் இல்லாவிட்டால் எதுதான் இவ்வுலகில் தொழிற்படும்? யார்தான் உயிர் வாழ்வார்கள்? தோற்றமற்றதாயும், நிராதாரமாயும், எண்ண முடியாததாயும், தேஹ ஸம்பந்தமற்றதாயுமுள்ள இந்த வஸ்துவில் ஞானி நிர்ப்பயமாக நிலைபெற்றால் அவன் பயம் நீங்கி விடுபடுவன். இதை உணராதவன் பேதபுத்தியால் பயத்திற்கு ஆளாகி வருந்துவான். இம்மாதிரியான பயத்தாலேயே காற்று வீசுகின்றது; ஸூர்யன் உதிக்கிறான்; அக்னி, இந்திரன், யமன் முதலியோர் தமதுதொழில்களை நடத்தி வருகின்றனர். இவ்வித பயத்திற்கும் காரணமான வஸ்து பரம்பொருளே.

இதில் ஞானிகள் அடையும் ஆனந்தத்தை இவ்வுபநிஷத் ஒருவாறு பின் வருமாறு அளவிட முயலுகின்றது. ஒரு யௌவன புருஷன் கற்றுத்தேர்ந்து, அதன்படி தவறாது நடந்து கொண்டு மனஉறுதி தேக பலம் உடையவனாகியும், ஏகசக்கிராதிபதியாயும் இருக்கிறான் என்று எண்ணிக்கொள்வோம்: அவனுக்கு உண்டாகும் ஆனந்தத்திற்கு மனுஷ்யானந்தம் என்று பெயரிட்டழைப்போம்.

| | | |
|---|---|---|
| 100 மனுஷ்யானந்தம் | =1 மனுஷ்யகந்தர்வ ஆனந்தம் | |
| 100 மனுஷ்யகந்தர்வ | =1 தேவகந்தர்வ | " |
| 100 தேவகந்தர்வ | =1 பிதிர்க்கள் | " |
| 100 பிதிர்க்கள் | =1 ஸ்வர்க்கதேவ | " |
| 100 ஸ்வர்க்க தேவ | =1 கர்மதேவ | " |
| 100 கர்மதேவ | =1 தேவ | " |
| 100 தேவ | =1 இந்திர | " |

100 இந்திர ஆனந்தம் =1 பிரஹஸ்பதி ஆனந்தம்
100 பிரஹஸ்பதி =1 பிரஜாபதி ,,
100 பிரஜாபதி =1 பிரஹ்ம ஹிரண்ய கர்ப

உலகப்பற்று நீங்கி வேதங்களை அப்பியாஸம் செய்து அதன்படி நடப்பவனுக்கு ஆனந்தம் வரவர மனுஷ்யானந்தத்திலிருந்து ஹிரண்ய கர்ப்பர் ஆனந்தம்வரையில் விருத்தியாகும். முற்கூறியபடி ஹ்ருதய குஹைபில் காணப்படும் பொருளும் ஸூர்யனுள் இருப்பதும் ஒன்றே. இம்மாதிரி உணருபவன் கிரமமாக ஒவ்வொரு கோசமாக அனுபவித்துத் தாண்டி உள்ளிருக்கும் பரம்பொருளில் நிலைபெறுவன். மனவாக்குக்கு எட்டாப் பிரஹ்மானந்தத்தை உணருபவன் எவனோ அவன் நிர்ப்பயனாகிறான். 'நான் என் தர்மத்தை நடத்தவில்லை! என்ன பாவம் செய்து விட்டேன்!' என்ற இவ்வித எண்ணங்களே அவன் மனத்தில் எழா. எல்லா விதத்துவந்தங்களும் பரம்பொருளே என்ற அனுபவம் அவனுக்குப் பிறக்கும். இதுவே உபநிஷத்.

III. பிருகுவல்லி.—முன்னர் பிரஹ்மஸ்வரூபத்தை நன்கு விளக்கிப் பின்னர் உபநிஷத்து இந்தப்பாகத்தில் அதை அடையும்முறையைக் கற்பிக்கின்றது. வருணன்பிள்ளையாகிய பிருகு என்பவர் தம்தகப்பனாரை அடைந்து 'ஸ்வாமி, எனக்குப் பிரஹ்மத்தை உணர்த்தவேண்டும்' என்று பிரார்த்தித்தார். அதற்கு அவர் பிள்ளையை நோக்கி, 'அன்னம், பிராணன், பார்த்தல், கேட்டல், மனம், வாக்கு ஆகிய இவைகள் எதிலிருந்து தோன்றி, எதில் நிலைபெற்று, எதில் முடிவில் ஒடுங்குகின்றனவோ அதுவே அறியத் தகுந்த பிரஹ்மம்' என்று சுருக்கிச்சொன்னார். உடனே பிருகு தபஸைக் குத்தொடங்கி முதலில் 'அன்னத்திலிருந்து எல்லாம் உண்டாகி, அதில் நிலைபெற்று, முடிவில் அதில் ஒடுங்குவதால் அதே பிரஹ்மம்' என்று உணர்ந்தார். இதை நன்றாக ஊன்றி நோக்கியதில் பிருகுவுக்கு ஸந்தேகம் உண்டாக, தகப்பனாரிடம் சென்று தன் ஸந்தேகத்தைத் தெரிவித்தார். அவர் 'விடாமல் தவம் செய் அதுவே பிரஹ்மம்' என்றார். இவ்வாறு அடிக்கடித்தூண்டப்பட்டுத்தவம் செய்துபிருகு முறையே பிராணன், மனம், விக்ஞானம், என்னும் இவைகளைப் பிரஹ்மமென மதித்து அவ்வவைகளிலிருந்து முன்னுள்ளவைகளுட் படஎல்லாம்தோன்றி, அவைகளில் நிலைபெற்று, அவைகளுள் அடங்குவதை அனுபவித்தறிந்து முடிவில் இவைகள் எல்லாவற்றின் ஸ்ருஷ்டி திதி ஸம்ஹாரம் என்பவற்றிற்கு இடமாக இருப்பது ஆனந்தமாம் பிரஹ்மம் என்று தீரத் தெளிந்தார். இவ்வாறு பிருகு உணர்ந்த பிரஹ்மம் பரமபதத்தில் நிலைபெற்றிருப்பது. இதை உணர்பவன் நிலைபெறுவான். இவனுக்கு எல்லாவிதச்சிறப்பும் உண்டாகும். இவன் எவ்வித ஆகாரத்தையும் வெறுக்கலாகாது.

கோசமூலமாக உள்ளிருக்கும் பிரஹ்மத்தை உணர முயலுபவர்கள், 'பிராணன் அன்னம், சரீரம் உண்பது, என்று உணர்ந்து எவ்வித ஆகாரத்தையும் நல்லது கெட்டது என்று பேதபுத்தியின்றி உண்ண வேண்டும். ஜலம் அன்னம், தேஜஸ்உண்பது, என்று உணர்ந்து ஆகாரங்களை விருத்தி செய்ய வேண்டும். பூமி அன்னம், ஆகாசம் உண்பது என்று உணர்ந்து வருபவர்களுக்கு இல்லை என்று கூறாது தங்கும் இடம் கொடுக்கவேண்டும். அன்னமும் அளிக்கவேண்டும். இவ்வாறு செய்வதனால் முமுக்ஷு மிகுந்த சிறப்பை அடைவான். முற்கூறிய ஒழுங்குப்படி இவன் நடக்கும் சிரத்தைக்கு ஏற்பவே இவனுக்குப் பலன் கிடைக்கும். இதன் பின்னர் இந்திரியங்களின் சக்தி ரூபமாகவும், வெளிப்பிரபஞ்ச விஷயங்களின் சிறப்பு ரூபமாகவும், ஆதாரமாகவும், பெரியதாகவும், எண்ண ரூபமாகவும், ஆராதனை ரூபமாகவும், பரவஸ்துவாகவும், ஸம்ஹாரகர்த்தாவாகவும், பிரஹ்மத்தைத் தியானஞ் செய்தால் அவனுக்கு அநேகவிதச்

சிறப்புகள் உண்டாகி முடிவில் ஆசையற்ற வனாக மேலான ஸ்திதிக்கு வருவான்.

மனிதனுள் காணப்படும் பொருளும் பிரபஞ்சத்தில் (ஸூரியனிடம்) காணப்படும் பொருளும் ஒன்றே. இதை உணர்ந்தவன் முறையே கோசங்களைத்தாண்டி நித்திய திருப்தனாகி 'நானே அன்னம்; அன்னம் உண்பவனும் நானே. நானே இவைகளைச் சேர்த்துவைப்பவன். நானே என்றும் இருந்து முதல் தோன்றியவன். தேவதைகளுக்கு முன்பு அழியாத் தன்மையாக விருந்தவன். கொடையாளிகளைக் காப்பவனும், கொடா முண்டர்களை விழுங்குபவனும் யானே. நான் எல்லாவற்றையும் அழிப்பவன். ஸூரியன் போலப்பிரகாசிப்பவன்' என்று ஆனந்த பரவசமாக மாறுதிருப்பன். இவ்வாறு உணர்பவன் பரமபதம் பெறுவன். இதுவே உபநிஷத்து.

இதன் பின்னர் விவேகபோதினி 2-ம் தொகுதி 7-ம் பகுதி 197-ம் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் ஞானயக்ஞம் எடுத்து விஸ்தரிக்கப்படுகிறது.

இந்த உபநிஷத்தில் அநேக விஷயங்கள் மறைந்து கிடக்கின்றன. அவைகளுள் சில, 'ஸ்ருஷ்டி விஷயம், ஞானம் மோக்ஷ ஸாதனம், ஆனந்தத்தின் ஸ்வரூமன், ஆராதனை விஷயம் என்பவைகளே. உபநிஷத்துக்கள் முடிந்ததும் இவைகளை எடுத்து வெவ்வேறாக ஸந்தர்ப்பங்களுக்கு ஏற்ப விவரிப்பாம்.

---

பொருளிலும் இன்பத்திலும் பற்றுள்ளமனம்.-- பொருளிலும் இன்பத்திலும் பற்றுள்ள மனம் பாக்குக் காயிலுள்ள கொட்டையைப் போன்றது. காய் பழுக்காதவரையில் கொட்டை இரசத்தால் , ஒட்டுடன் பற்றியிருக்கின்றது. காய் உலரின் கொட்டை ஒட்டினின்றும் பிரிந்து, ஆட்டினால் ஒட்டுள் ஆடுவதாய்த் தோன்றுகின்றது. அஃதேபோல் பொன்னிலும் காமத்திலும் பற்றெனும் ரசம் வற்றமாயின் மனிதனும் முக்தனாகின்றான்.

## ஸ்ரீமத்வாசாரியர்

ஸ்ரீமத்வாசாரியர் என்பவர் உடுப்பி என்ற க்ஷேத்திரத்துக்கு அருகாமையில் உள்ள பஜக க்ஷேத்திரம் என்ற கிராமத்தில் ஸுமார் 750 வருஷங்களுக்கு முன் அவதரித்தவர். இவர் வாயுவினது அவதாரம் என்று இவர் சரித்திரங்கள் கூறும். இவர் தாய் வேதவதி, தந்தைமத்யகேஹர். இவர் இளமைப்பருவத்தில் மிகுந்த அற்புதமான திருவிளையாடல்கள் செய்தார். இவர் தகப்பனை ஓர் நாள் கடன்காரன் வந்து மறித்துக் கொள்ள அவர் மிகத்தத்தளிப்பதைக்கண்டு இவர் அவனை ஓர் புறம் அழைத்துச் சென்று அருகிலிருந்த புளியங்கொட்டைகளை வாரி அவன் கையில் போட்டார். உடனே அவைகள் அவனுக்குக் கொடுக்கவேண்டிய தொகை யளவு பொன்னாகமாறின. அவன் இந்தச்சங்கதியை ஊரிலுள்ளாருக்குவெளியிட எல்லோரும் மிகுந்த ஆச்சரியத்தை யடைந்து இக்குழந்தையை ஓர்தெய்வீகக்குழந்தைஎன்று மதித்தனர். அநேக நாள் இக்குழந்தை காணமற்போய் அதிவியப்பாக அகப்பட்டது. பின்னர் மத்வரது பால்யலீலைகள் சற்று ஏறக்குறைய ஸ்ரீ கிருஷ்ணரது பால்யலீலைகள் போல விளங்கும். இவர் தமது தகப்பனரிடமிருந்தும் கிராமத்திலிருந்த ஓர் ஆசாரியரிடமிருந்தும் கல்விகற்றார். எந்தக்காலத்திலும் இவர் அற்புதச் செயல்களைச் செய்வதுண்டு. இவர், தோழனது தீராத்தலைவலியைக் காதில் ஊதி உடனே தீர்த்தார். படிப்பு முடிந்த காலத்தில் இவர் தமது குருவுக்குக் கூட ஐதிரேய உபநிஷத்தின் ரஹஸ்யத்தை உபதேசித்துத் தமது விஷ்ணு பக்தியின் சிறப்பைக் காட்டினார்.

இவருக்கு உபநயனமான பிறகுஓர் குருவைச் சென்று அடுத்தார். அதுமுதல் இவருக்கு ஸந்யாஸத்தில் இச்சை பிறந்தது. உடுப்பியிலேயே அச்யுதப்ரேக்ஷர் என்ற ஓர் ஆசாரியர் இவருக்

குக் கிடைத்தார். அவரிடம் இவர் உபதேசம் பெற்று ஸங்யாஸம் வாங்கிக் கொள்வதாகத் தீர்மானித்தார். இவ்விஷயம் மத்ய கேஹருக்குத் தெரிந்ததும் பிள்ளையை வந்து பார்த்து, ஸங்யாஸம் வாங்கிக் கொள்ளலாகாதென்று புத்திமதி கூறினர். அதற்கு அவர் இசையாது பிடிவாத மாகவே இருந்தார். மத்ய கேஹர் தமக்குப் பிள்ளையிருந்தும் வயது காலத்தில் பயன் படாது போனதை வாய்விட்டுக் கூறி மிகவும் துக்கிக்க மத்வாது மனம் இளகி "தம்பி பிறக்கும்வரை நான் ஸங்யாஸம் வாங்கிக் கொள்வதில்லை" என்று வாக்களித்தார். அதற்கேற்பக் கொஞ்ச நாளில் தம்பியும் பிறந்தான். உடனே மத்வர் ஸங்யாஸம் வாங்கிக்கொள்ள தாயினிடம் உத்தரவுகேட்டு வெகு தர்க்கத்தின்பேரில் அவளிடமிருந்துஅனுமதிபெற்றுத்தமது குருவிடம் வந்து ஸங்யாஸம் வரித்துப் பூர்ண பிரஞ்ஞர் என்னும் பெயர் பூண்டார். இவ்வாறு பூண்டதும் உடனே இவர் தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டார். போகும் வழியில் அவர் தெற்கே சென்று விஷ்ணுமங்கலம் என்ற ஊரை அடைந்தார். அங்கு வாயு புத்திரனை வீமனைப் போல் பெருந்தீனிகள் தின்னமுடியும் என்றும் குறைந்த வஸ்துக்களை அதிகமாக்கும் திறன் உண்டென்றும் வெளிப்படுத்தினர். இக்காலத்திற்குள் இவருக்குச்சாஸ்திரவிஷய ஞானமும் அதைஎடுத்து விளக்குஞ்ஞானமும் தர்க்கத்தில் ஜயிக்கக்கூடிய ஞானமும் பூர்ணமாய் இவரிடம் ஏற்பட்டது. இவருக்குச் சுற்றிலுமிருந்த அத்வைத ஸித்தாந்தம் பொருத்தம் உள்ளது என்று படாமற்போக அவர் பொதுவாக அதைக்கண்டித்து வாதம் செய்துவந்தார். மற்றைய ஸித்தாந்தங்கள் யாவும் இவருக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. இப்படி இவர் வாதம் செய்துகொண்டு திருவநந்தபுரம் வந்து சேர்ந்தார். அங்கு அவர் அப்பொழுது இருந்த ஸ்ரீங்கேரி வித்யாசங்கரரை ஸந்திக்கும்படி நேர்ந்தது. அங்கு இவர்கள் இருவருக்கும் அரசன்முன்னிலையில் தர்க்கம் உண்டாகஒருவர்க்கொருவர் இளைக்காதுவெகுகாலம் கக்ஷிப்பிரதிகக்ஷிகள் சொல்லிவந்தனர். இதில் ஒருவருக்கும் ஜயம் என்பது ஏற்படாது துவேஷம் மாத்திரம் ஸித்தித்தது. அன்று முதல் ஸ்ரீமத்வாசாரியர் அத்வைதத்தை எல்லையின்றி இகழ்ந்து பேசவும் அதை நிலைநிறுத்திய ஆதிசங்கரரை வாய் கூசாது குற்றங் கூறவும் கிளம்பிவிட்டார். ஸ்ரீமத்வர்யாத்திரைசெய்துகொண்டு இராமேசுவரம் வருங்கால் மறுபடியும் இவர்களுக்கு இம்மாதிரித்தர்க்கம் உண்டாகி மனஸ்தாபங்கள் முதிர்ந்தன. இதனால் இந்த யாத்திரை முடிந்து ஸ்ரீமத்வர் உடுப்பி வந்ததும் தாம் ஸித்தாந்தமாகக் கொண்டிருக்கும் துவைதத்திற்கு இசைய, பகவத்கீதைக்கு ஓர் வியாக்யானம் செய்தார். இதன் பின்னர் இவர் வடக்கு நோக்கி யாத்திரைசெய்யப் புறப்பட்டார்.


போகும்வழியில் இவருக்கு அநேக கஷ்டங்கள் நேர்ந்தன. இவைகளை எல்லாம் லக்ஷியம் செய்யாது இவர் நேரே ஹரித்வாரம் போய் அங்குக் கொஞ்சநாள் இருந்துவிட்டு அப்பால் பதரிகாச்ரமம் சென்று அந்த ஓர் இடத்தில் தம் சிஷ்யர்களை யெல்லாம் நிறுத்திவிட்டுத்தாம் பாறை பாறையாகத் தாண்டி வெகு வேகமாக வேதவியாஸர் ஆச்ரமம் சென்று அங்கு அவரிடமிருந்து நேரே உபதேசம் பெற்றுப் பின்னர் பிரஹ்ம ஸூத்ரத்திற்கு வியாக்கியானம் செய்ததாக இவர் சரித்திரங்கள் கூறும். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு வங்காள தேசம் போய் அங்குத் தமது மதத்தை ஸ்தாபித்துவிட்டு ஜகந்நாத க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார். அங்கு வந்ததும் இவருக்கு முக்கியமான இரண்டு சிஷ்யர்கள் ஏற்பட்டனர்; அவர்களுக்கு முறையே ஸோபன்னபட்டர் என்றும், ஸாமிசாஸ்திரி என்றும் பெயர். இவர்கள் முதலில் ஸ்ரீமத்வரிடம் தர்க்கம் செய்ய வெகு விவா

தத்தின்பேரில், முதலில் ஸோபன்னபட்டரும், பின்னர் ஸாமி சாஸ்திரியும் இவருக்குச் சிஷ்யர்களானார்கள். அதில் ஸாமி சாஸ்திரி ஸந்யாஸம் பெற்றதும் அவருக்கு நரகரி தீர்த்தர் என்று பெயரிடப்பட்டது. ஸ்ரீ மத்வாசாரியர் தெற்கே புறப்பட்டதும் நரகரி தீர்த்தரும் கூடவே புறப்பட்டார். அப்பொழுது அவரை நோக்கி "நீர் கலிங்க தேசத்தில் பரோபகாரமாகக் கொஞ்சகாலத்தைக் கழித்து அந்த அரசனிடம் இருக்கும் மூலராமமூலஸீதா விக்ரஹங்களை உடுப்பியில் கொண்டுவந்து சேர்ப்பீர்" என உத்தரவளித்தார். குருவைப் பிரிய மனமில்லாதவராய் நரகரிதீர்த்தர் கலிங்கதேசத்திலேயே தங்கிவிட்டார். அங்கிருந்த அரசன் சிறுவனாயிருந்ததால் அவன் தக்க பருவம் அடையும் வரை அவனுக்குப் பதிலாக நரகரிதீர்த்தரே அங்கு வெகுகாலம் ராஜ்யம் ஆளும்படி நேர்ந்தது. ஸோபன்னபட்டர், நரகரிதீர்த்தர் என்னும் இவர்களுடைய முயற்சியால் ஸ்ரீமத்வரது ஸித்தாந்தம் நன்றாகத் தெலுங்கு தேசங்களிலெல்லாம் வேர் ஊன்றியது.

மத்வர் உடுப்பி வந்ததும் அச்யுதப்ரேக்ஷர் என்ற தமது குருவுக்குத் தாம் வியாஸரிடம் கேட்ட அற்புத விஷயங்களையெல்லாம் சொல்லித் தமது ஸித்தாந்தத்திற்கு அவரை இசையும்படி செய்து தாம் எழுதிய ஸூத்ர பாஷ்யத்தையும் அவருக்குத் தெரிவித்தார். அவர் இவைகளை ஒப்புக்கொண்டு துவைத ஸித்தாந்தத்தை அனுஸரிக்கலாயினர். இந்த ஸித்தாந்தத்தைப் பின்பற்றுபவர்கள் விஷ்ணுவினது ஆயுத முத்திரைகளை தேகத்தில் சூட்டிக்கொள்ள வேண்டும் என்று பின்னர் ஓர் நிபந்தனை செய்தார். அவ்வூரில் நாள்தோறும் எல்லோருக்கும் விடாது பகவத் விஷயங்களைப் பற்றி இவர் உபதேசித்து வந்தார். ஒரு நாள் இவர் ஸமுத்திர ஸ்நானத்துக்குப் போயிருக்கையில் இவருக்கு ஸ்ரீ கிருஷ்ணன்பேரில் துவாதச ஸ்தோத்திரம் ஒன்று செய்யவேண்டும் என்ற பரபரப்பு உண்டாயிற்று. இந்தப் பரபரப்பின் மாதிரியால் அன்று உடுப்பியில் கிருஷ்ணபகவான் வந்து சேரப்போகிறார் என்னும் ஓர் வித எண்ணமும் உண்டாயிற்று. இவ்வெண்ணத்துடன் ஸ்நானம் செய்து பகவத்தியானம் செய்ய உட்கார்ந்தார். அப்பொழுது நடுவில் கண்ணைத்திறந்து நோக்கினர். உடனே எதிரில் துவாரகையிலிருந்து வந்துகொண்டிருந்த ஓர் கப்பல் தென்பட்டது. அது அலைகளின் வேகத்தால் கண்டபடி இழுக்கப்பட்டு வந்ததுபோல் தோற்றியது. அதில் இருப்பவர்கள் என்ன முயன்றும் அக்கப்பலைத் தடுத்து நடத்த முடியவில்லை. அக்கப்பலையும், கப்பல்காரர்களையும் காப்பாற்றத் தமது கையிலிருந்த சிறுதுண்டை ஸ்ரீமத்வர், கப்பலை அழைப்பதைப்போல், அசைத்தார். உடனே கப்பல் அபாயம் நீங்கிக் கரை வந்து சேர்ந்தது.

கப்பல் தலைவன் ஸந்தோஷம் அடைந்து மத்வரிடம் வந்து ஏதாவது கைம்மாறு பெற்றுக் கொள்ளவேண்டும் என்று மிகவணக்கத்துடன் கேட்டுக்கொண்டான். உடனே மத்வர் கப்பலிலிருந்த பணம் முதலியவைகளைக் கவனியாது, "உங்கள் கப்பலில் இருக்கும் கோபிச் சந்தனக் கட்டிகளுள் பெரியவைகள் சிலவற்றைக் கொடுத்துவிடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். அவர்கள் அவ்வாறு செய்ய கட்டிகளுள் பெரிதாயிருந்த ஒன்றைத் தமது அருகே கொண்டு வரச்சொன்னர். அக்கட்டி கீழே இறக்கியதும் இரண்டாகப் பிளந்து விழுந்தது. அதனுள்ளிருந்து அழகான சிறியதோர் கிருஷ்ண விக்ரஹம் மத்தும் கையுமாய்த் தோன்றியது. உடனே மத்வர் பக்திப் பரவசரானர், இந்த விக்ரஹத்தை உடுப்பிக்குக் கொண்டுபோய் ஓர் கோயில்கட்டி ஸ்தாபித்து அதில் பூஜாவிதிகளை ஏற்படுத்தி அவைகளை மிகுந்த சிரத்தையுடன் தாமே அனுஷ்டித்துவந்தார். அவர் காலம் முதல் இக்கோவில் மிகப் பிரபலமாயிருக்கிறது.

இதன் பின்னர் மத்வர் யாகங்களில் உயிர்ப் பிராணிகளைக் கொல்லக் கூடாதென்றும் அவைகட்குப் பதிலாக மாவால் செய்த உருவங்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஏற்பாடு செய்து யாகங்களைச் சீர்திருத்தினர். தாம் இல்லாத காலங்களிலும் தமக்குப் பிற்காலத்திலும் கிருஷ்ணன் பூஜை உடுப்பியில் தவறாது நடந்து வருவதற்காக எட்டு



மடங்கள் ஏற்படுத்திப் பூஜைசெய்யும் முறைமையும் ஏற்படுத்தினர். அம்மடங்கள் இக்காலத்திலும் இருக்கின்றன. பூஜையும் தவறாது நடந்து வருகிறது.

இவ்வாறு உடுப்பியில் சீர்திருத்தங்கள் செய்துவிட்டு மத்வர் இரண்டாம்முறை பதரிகாச்ரமம் நோக்கிப் புறப்பட்டார். போகும் வழியில் ஓர் அரசன் தன் எதிரில் ஜனங்களை யெல்லாம் பொது நன்மைக்கு வேண்டிய வேலைகளைச் செய்வதில் கட்டாயப்படுத்தி வேலை வாங்கி வந்தான். மத்வரையும் அவன் அவ்வாறே செய்ய அவர் அவனைச் சற்று உற்றுநோக்கி வேலை செய்யும்படி ஏவினர். அரசன் மெய்ம் மறந்து வேலைசெய்யத் தொடங்க மத்வர் ஸமயம்பார்த்துச் சிஷ்யக் கூட்டங்களோடு தப்பித்துக்கொண்டு யாத்திரை செய்யப் புறப்பட்டார். வழியில்இவர் துருக்க ராஜாக்களைப் பார்க்க வேண்டி நேரிட அவர்களிடத்தில் துருக்கிலேயே பேசி அவர்களைச் சந்தோஷப்படுத்தி அநேகவித அபாயங்களிலிருந்து தப்பித்துக் கொண்டார். முன்னர் சென்றபடி மறுபடியும் வியாஸரிடம் போய் எட்டு ஸாலிக்கிராமங்கள் பெற்று மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் என்ற ஓர் நூலையும் செய்ய அனுமதி பெற்றார் என்று அவர்சரித்திரங்கள்கூறும். அநேக வித அற்புதச் செயல்களைச் செய்துகொண்டும் துவைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்துக்கொண்டும் மத்வர் உடுப்பிவந்து சேர்ந்தார்.

மத்வர் இவ்வாறு ஜயம்பெற்றுத் தம்மதத்தைப் பரவச் செய்து வரும் காலத்தில் ஸ்ரீங்கேரி மடத்தில் அப்போதிருந்த பத்ம தீர்த்தர் என்பவருக்கு மத்வமதத்தை எப்படியாவது

பரவ ஒட்டாது தடுக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. இவருக்கு முன்னிருந்த ஆசாரியர் வித்யாசங்கரருக்கும் மத்வருக்கும் திருவனந்தபுரத்தில் நேர்ந்த மனஸ்தாபங்கள் இவருக்குத் தெரிந்திருந்தது. ஆதலால் மத்வ மதத்தைக் குற்றங்கூறிப்பிரஸங்கிக்க அநேகரை ஏற்படுத்தித் தாமும் மத்வரது மத விஷய புத்தகங்களைத் தந்திரமாகக் கொள்ளையிட ஏற்பாடு செய்தார். புத்தகங்கள் காணாமற் போனதும் மத்வர் அருகிலிருந்த ஜயஸிம்மன் என்ற அரசன் ஸஹாயத்தால் புத்தகங்களைப்பெற முயற்சித்தார். இதன் பின்பு இவர் விஷ்ணுமங்கலம் என்றவூரில் உபந்யாஸம் செய்துகொண்டிருக்கையில் திருவிக்கிரமர் என்ற ஓர் பெரிய பண்டிதர் இவருக்குச் சிஷ்யராக ஏற்பட்டார். இங்குதான் ஜயஸிம்மனிடமிருந்து மத்வர் தமது புத்தகங்களை நேரிடப் பெற்றது. திருவிக்ரமர் மத்வருக்குச் சிஷ்யரானதும் அவரால் மத்வஸித்தாந்தம் மிகவும் பரவ அநேகர்கள் அதை அங்கீகரித்தனர். இவரது வேண்டுகோளின் பேரில் மத்வர் பிரஹ்ம ஸூத்திரத்திற்கு ஓர் விஸ்தார வியாக்யானம் செய்தார். இந்தத் திருவிக்ரமரது பிள்ளையாகிய நாராயணாசாரியர் பின்னர் மத்வரது சரித்திரத்தை மத்வ விஜயம் என்ற காவ்ய ரூபமாகச் செய்தார்.

இப்படியிருக்க, ஸ்ரீ மத்வரது தந்தையான மத்ய கேஹர் சாஸ்திர நெறி தவறாது ஒழுங்காக வாழ்ந்துவந்து முதிர்ந்த வயதில் பகவான் பாதாரவிந்தங்களைச் சேர்ந்தார். கொஞ்சநாளில் அவர் தாயும் அவள் கணவனைப் பின் தொடர்ந்தாள். மத்வரது தம்பி தாய் தகப்பனுக்குச் செய்யவேண்டிய ஈமக் கடன்களை ஒருவாறு செய்து மத்வர் இருக்குமிடம் வந்து ஸங்கதிகளையெல்லாம் சொல்லித் தமக்கு ஸந்யாஸம் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். இதைக் கேட்டதும் மத்வர், தம்பியை நோக்கி "இன்னும் செய்ய வேண்டிய கடன்களைச் செய்து முடி, நான்கு மாஸம் கழித்துப்பார்த்துக்கொள்வோம்" என்று உத்தரவளிக்க, தம்பியும் அவ்வாறேயிருந்தனர். நான்குமாதம் கழிந்ததும் மத்வரே பஜகக்ஷேத்திரம் சென்று தம்பிக்கு ஸந்யாஸம் கொடுத்து விஷ்ணு தீர்த்தர் என்ற பெயரையும் கொடுத்தார். பின்னர் இவரை உடுப்பியில் இருந்த எட்டு மடங்களுள் ஒன்றிற்கு அதிபதியாக்கினர்.

மத்வர் உலோகோபகாரமாக வாதம் செய்து வந்தார். அவர் தம்பியோ, ஸந்யாஸ முறைமைப்படி உலகினின்றும் ஒதுங்கி ஸந்யாஸ ஒழுங்கை எல்லோருக்கும் அனுஷ்டித்துக் காட்டினர். இதன் பின்னர் மத்வர் தென்கன்னடம்,மைசூர் முதலிய இடங்களுக்கு யாத்திரையாகச் சென்று தாம் வாயுவினுடைய அம்சம் என்பதை தமது பலத்தின் சிறப்பு முதலியவைகளால் வெளிப்படுத்தினர். இந்த யாத்திரை முடிவில் நரகரிதீர்த்தர் கலிங்க தேசத்தில் வெகுகாலம் அரசாண்டு அரசனுக்குத் தகுந்த வயது வந்ததும் அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து அவனிடமிருந்து ராமர், ஸீதை என்பவர்களுடைய விக்ரஹங்களைப் பரிசாகப் பெற்று உடுப்பி வந்து சேர்ந்தார். மத்வர் அவைகளை மிகுந்த பக்தியுடன் பெற்றுப் பூஜையில் சேர்த்துக் கொஞ்ச நாள் ஆராதித்து வந்தார். இப்படியிருக்கையில் ஸுமார் 79-ம் வயதில் ஓர்நாள் பூஜை எல்லாம் முடித்துவிட்டு ஐதிரேய உபநிஷத்தைத் தமது சிஷ்யர்களுக்கு உபதேசம்செய்துகொண்டு ஸ்ரீ மத்வர் பகவான் பாதாரவிந்தங்களை யடைந்தார்.

---

குடும்பிகள் மதோபதேசத்தைக் கவனியாதிருத்தல்.—ஜலமானது பாலத்தின் ஒரு பக்கத்துள் நுழைந்து மற்றொரு பக்கம் வெளிப்படுதல் போல மதோபதேசமும் குடும்பிகளின் காதொன்றுள் நுழைந்து அவர்கள் மனத்துப்பதியாது மற்றொரு காதின் வழியாய் வெளியேறுகின்றது.

கல்லில் ஆணியை யடிப்பது கடினமாயும் மண்ணில் அடிப்பது சுலபமாயு மிருத்தல்போல, ஞானியின் உபதேசம் குடும்பிகள் மனத்தில் பதியாதும் பக்குவிகள் மனத்தில் வேரூன்றியும் விளங்குகின்றது.

# பாடசாலைகளில் தோட்டம் அமைப்பதின் நோக்கமும் அமைக்க வேண்டிய முறையும்

## SCHOOL GARDENING—OUR VIEWS AND METHODS

பூமியை யுழுதுண்பதும் பயிர் பச்சைகளை விவசாயஞ் செய்வதும் தோட்டம் வைத்துப் பயிர் செய்வதும் நாகரீகமடைந்த எந்நாட்டார்க்குந் தொன்றுதொட்டுத் தெரிந்துவரும் விஷயமே. நீர்வளமும்நிலவளமும் பொருந்திய இப்பரதகண்டத்தில் பெரும் பான்மையோர் வேளாண்மைத் தொழிலாலேயே ஜீவனஞ் செய்து வருகிறார்கள். ஆதலின் தோட்டம் அமைத்தலென்பது நமக்கெல்லாம் புதிய விஷயமன்று. விவசாயத்தையே முதன்மையாகக்கொண்ட நமக்குத் தோட்டம் அமைத்தல் என்பதைக் குறித்து யாது புதியதாகச் சொல்லக்கூடுமென்று சிலர் நினைக்கலாம். ஆனால் அவ்வாறு நினைக்கக் கூடாது. ஏனெனில் தோட்டம் வைத்தல் நம்மவர்க்கு நூதனமன்றெனினும் பாடசாலைகளில் தோட்டவேலைசெய்தல் நவீன மானதே. படிப்பினும் பல நூலாராய்ச்சியினும் மேன்மையடைந்திருக்கும் மேற்றிசையோர் பயினும் மாணாக்கர்களின் இயற்கைக் குணங்களைப் பரிசீலனஞ் செய்து அன்னோர் தன்மைக்கிணங்கும் வண்ணம் ஏற்படுத்தியிருக்கும் பாடசாலைகளில் தோட்டவேலை யென்பது முக்கியபாடங்களிலொன்றெனத் தெரிந்து அவ்வாறே அதனைத் தமது பள்ளிக்கூடங்களில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதனால் பல நன்மைகள் ஏற்படுகின்றன வென்று மேனாட்டு வித்தியா நிபுணர்கள் கூறியிருக்கின்றமையால் அத்தகைய பிரயோஜனங்களை நமது சிறுவர்களும் அடைதற் பொருட்டு நமது பள்ளிகளினும் தோட்டமிருத்தல் வேண்டுமெனச் சில ஆண்டுகளாக வித்தியா கலாத் தலைவர்கள் கட்டளையிட்டிருக்கின்றனர். மாணவர் நன்கு தேர்ச்சியடைய வேண்டுமென்ற கருத்துடன் துரைத்தனத்தார் இப்பாடத்தினை நூதன பாடங்களிலொன்றாக விதித்தும்எப்படிப்பட்ட நன்மைகளைக்கொடுக்கக் கூடியதென்று தாமே ஆலோசனை செய்து பார்த்தறிந்து கொள்ளப் பிரியம், அவகாசம் என்பவை இல்லாமலும் தோட்டங்களையே வைத்து நடத்து முறைகளையறிந்து பிறகுதாமே பள்ளியில் தோட்டம் வைத்து அதனாற் பயன் யாது எனக் கண்டுகொள்ளப் பொறுமை, ஊக்கம், பிரியம் என்னுமிவை இல்லாமலுமிருக்கிற உபாத்தியாயர்களிடம் தோட்டம் வைக்கவேண்டுமெனப் பன்முறைகூறியும்அநேகவிடங்களில் இன்னும் வைக்காம லிருப்பதுமன்றிப் பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்லி வைக்கவேண்டுமோ தோட்ட வேலையிற் பழக்கவேண்டுமோவெனவும் கேட்கிறார்கள். இதனாலன்றோ சில பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு வீட்டில் விவசாயம் கற்பித்து இதற்காகப் பாடசாலைக்கனுப்புவானேனென்று கேட்க இடம் தருகிறது. இவர்கள் இவ்வாறு எண்ணுவதைக் குறித்து ஆச்சரியமேனும் வருத்தமேனும்அடையச்சற்றும் இடமில்லை. ஏனெனில் வெகுகாலமாய்ப் படிப்பென்பது இதுதானென்று ஒருவித அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டு அதன்படி நடத்தி வந்திருக்கிறார்கள். நன்மை பயக்கக் கூடியதென நமக்கு நன்கு புலப்படும் விஷயங்களை நாம் எடுத்துக் கூறினும் தமது கொள்கைக்கு மாறுபாடாயிருத்தலின் அவர்கள் அவைகளை யேற்றுக்கொள்வதில்லை. அவர்கள் விதிப்படி பாடசாலைகளில் உபாத்தியாயர்கள் கற்பிக்கவேண்டிய பாடங்களாகிய இலக்கிய இலக்கண எண்களுமே போதனா முறையெனச் சற்றுமறியாதவர்களாகையால் எப்படியாவது பிள்ளைகள் சில விஷயங்களைக் குரு

முன்னிலையிற் புத்தகமூலமாகவே கற்கவேண்டுமென்றே நினைக்கிறார்கள். தற்காலத்து ஆங்கிலப்புலவர்கள் இதற்குச்சற்று மொவ்வாத வழிகளைச் சொல்லுகிறார்கள். அதாவது எவ்வளவுக்கெவ்வளவு பாலர்கள் முதலிற் புத்தகமின்றிச் சுற்றிலுமுள்ள தாவர சங்கமப் பொருள்களைப் பார்த்தும் அவைகளைப்பற்றிக் கேட்டுந் தம் அனுபவத்தாலறிந்து கொள்ளுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் உண்மையான அறிவிற் றேர்ச்சியடைகிறார்களென்றும், பின்னர் இயற்கையாகிய புத்தக வாயிலாலடையும் அறிவு நீடித்து நிற்கக்கூடியதும் உபயோகமானதுமான அறிவென்றும் அதுவே பிள்ளைகளுக்கு ஏற்பட்ட சரியான வழியென்றும் கூறியிருக்கின்றனர். இப்படிப்போதனை முறைகளில் வித்தியாசம் ஏற்பட்டிருப்பதால், தோட்டம் வைத்தலென்பது சர்க்கார் நிபந்தனைக்குப் பயந்து நடத்தும் பாடங்களிலொன்றா யிருக்கின்றதேயன்றி அதில் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் உபாத்தியாயர்களும் பிள்ளைகளும் வேலைசெய்யும் பாடங்களிலொன்றாயில்லை. இக்குறைக்குக் காரணம் ஒன்றே. அஃதாவது தோட்டத்தாலடையக்கூடிய இலாபம் யாதென அறிந்துகொள்ளாமையும், அதை வைத்து நடத்துகிற முறையை அறிந்துகொள்ளாமையுமே. அப்படி அறிந்துகொண்டால் தாங்களே நன்கு உழைப்பார்கள். இனியாவது அறிந்து நன்கு உழைப்பார்களென்று நம்பிப் பாடசாலையில் தோட்டம் வைத்தலென்பதைக் குறித்துச் சில விஷயங்களைச் சொல்லுகிறேன்.

சிறுவர்களுக்குக் கல்வி புகட்டுவதின் நோக்கம் யாதென ஆராய்ந்து நோக்கின் அவை கீழே கூறும் விஷயங்கள்தானென்பது நன்கு புலப்படும். அவையாவன அறிதல், உணர்தல், தீர்மானித்தலெனும் மும்மனோ சக்திகளையும் விருத்தி செய்வதும் பிறரிடத்தில் தாங்கள் நடப்பதெங்ஙனம் என்பதை யறிந்து கொள்வதும், தேகப்பயிற்சி யடைவதும், நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து நன்மையைக் கடைப்பிடித்துத் தீமையைத் தவிர்ப்பதும், சகலபொருள்களையும்ஆக்கி யழிக்கவல்ல இறைவனிடத்துப் பயபக்தியை விளைவிப்பதும், தன்னைச் சுற்றிலுமுள்ள இயற்கைப் பொருள்களை நோக்கி ஆனந்திப்பதும், அழகிய வஸ்துக்களில் விருப்பும், அழகற்ற பண்டங்களில் வெறுப்புமுண்டாவதும் சுருங்கக்கூறின் தன் வயது வந்தவுடன் தான் உலகத்தில் நடந்துகொள்ளும் வழிகளை அறிந்துகொள்ளுவதுமே. இந்நன்மைகளெல்லாம் புத்தகம் படிப்பதால் மாத்திரம் வாராது. இவைகளின்நோக்கத்தைத் தோட்டவேலையால் பிள்ளைகள் அடைகிறார்கள். மேலும், கற்கும் சிறுவர் சிறுமிகளின் சுபாவங்களைக் கவனித்துப்பார்த்தால் பாலர்களனைவருக்கும் பொதுவான பல நன்மைகள் இருக்கின்றனவெனத் தெரியவரும். உதாரணமாக மண்ணில் விளையாடல், ஏதாவது வேலை செய்துக்கொண்டிருத்தல், தனது பொருள்களைப் போற்றல், தன் கையிற் கிடைத்தவற்றைப் பிரித்துப் பார்த்துப் பலவிதமாக அவைகளை மாற்றி அவைகளைக் குறித்துப் பல கேள்வி கேட்டல், அழகிய பண்டங்களில் ஆசைப்படுதல் என்னும் இவைகளைப்போன்ற அநேக முள்ளன. இத்தன்மைகளெல்லாம் தோட்டவேலை செய்வதால் விருத்தியடைகின்றன.

கையிற் பிரம்புகொண்டு படி படி யென அதட்டி, மிரட்டி நாள் முழுவதும் பள்ளிச் சிறையிலடைப்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. பிள்ளைகளுக்குப் படிப்பில் அவா உண்டாவதற்குப் பதிலாக வெறுப்பு உண்டாகிறது. அப்படியன்றிச் சுவடிகள் படித்த நேரம் போக மற்றநேரங்களில் விளையாடியோ தோட்டத்தில் வேலைசெய்தோ தமது கை கால்களை நன்கு உபயோகித்துச் சந்தோஷமாய்ப் பல சங்கதிகளை அறிந்துகொண்டால் பாடசாலைக்குப் போக மிகுந்த பிரியமும் நூதனமான பல

விஷயங்களை அறிய அவாவும் உண்டாக இடமாகின்றது. பல செடிகளின் பெயரைத் தமது உபாத்தியாயர் சொல்லியோ அல்லது தெரிந்தபிள்ளைகள் கூறியோ அறிந்து கொண்டு அவைகளில் ஒன்றுக்கும் மற்றொன்றுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தாங்களே பார்த்து அறிவதால், ஞாபகம், ஆராய்ந்து நோக்குதல், கற்பனுசக்தி என்ற திறமைகள் விருத்தி யடைகின்றன. தோட்டங்களில் பாத்திகோலி நீர்பாய்ச்சி வேலை செய்வதால் சந்தோஷமாகத் தேகப்பயிற்சி உண்டாகின்றது. சிலசெடிகளைச் சிலபிள்ளைகள் வசம் ஒப்புவித்துவிட்டால் அவர்கள் அவைகளைத் தமது பொருளாகக் கருதி மிக்க கவலையெடுத்து வளர்த்து குறித்த நேரங்களில் ஏற்பட்ட வேலைகளைப் பலன் கிடைக்கும் வரை மிக்க ஊக்கத்துடன் வேலைசெய்து தாம் பலன் அடைந்தவுடன் அளவிறந்த சந்தோஷமடைகிறார்கள். இப்படிப்பழக்குவதால் அவர்கள்செய்யும் ஒவ்வொரு வேலையிலும் பலனடைய விடா முயற்சி, பொறுமை, சுத்தம், ஒற்றுமை, தயை, குறித்தகாலங்கடவாமை என்னும் பல குணங்கள் இன்றியமையாதவை யெனத் தாமே அறிந்து கொள்ளுகிறார்கள். பற்பல புற்பூண்டுகளை வைத்துவளர்த்தலால் வாசக புஸ்தகங்களிற் கூறியிருக்கும் சிலசங்கதிகளைத்தாமே பரீக்ஷாபூர்வமாக அறிந்துகொள்ளுகிறார்கள். அபூர்வமான செடிகளைக் கண்டும் விநோதமான பலவர்ணமுள்ள புஷ்பங்களைக் கண்ணுற்றும் கணக்கிலடங்காத தாவரசங்கமப்படைப்பினைப் பார்த்தும் கடவுளின் சர்வவல்லமையைக் குறித்து அச்சமும் ஆச்சரியமுமடைந்து அவர் மிக்க மேலானவர், அவர் சக்தி அபாரம், நாம் அவருக்கு மிக்க கடமைப்பட்டவர்கள், எக்காலும் கீழ்ப்படிந்து அவர் சட்டப்படி நடக்க வேண்டுமென்று தெய்வபக்தி உற்பத்தியாகின்றது. பலர்கூடி ஒருதோட்டத்தில் வேலைசெய்ய வேண்டியிருத்தலால் பிள்ளைகளுக்குள் ஐக்கியமும் ஒருவருக்கொருவர் உதவிசெய்யவேண்டுமென்ற எண்ணமும் தன் பொருள்போல் பிறர் பொருளைக் கருதவேண்டுமென்ற பழக்கமும் ஏற்படுகிறது. இவையன்றி ஒவ்வொரு பயிரையும் பயிர்செய்யவேண்டிய வழியையும் காலத்தையும் செடிகளின் உபயோகத்தையும் தெரிந்து கொள்ளுகிறார்கள். எட்டுச் சுரக்காயைக் காட்டிலும், தாமே பயிர்செய்து அடைந்த கொடிக்காய் எவ்வளவு உண்மையானது, உபயோகமானது, ருசியானது என்பன சொல்லாமலே விளங்கும்.

ஆனால் மேற்கூறிய நன்மைகளெல்லாம் ஒரு மாதம் அல்லது ஒரு வருஷம் தோட்டத்தில் வேலை செய்வதால் ஏற்படாது. சரியாகச் சில வருஷங்கள் நடத்தினுல் தான் உண்டாகும். தோட்டம் வைப்பதற்கு முன் அந்தந்த ஊரில் பொதுவாய்ப் பயிராகும் பொருள் யாதென்பதையும், இடவசதியையும், தண்ணீரின் சௌகரியத்தையும் கவனிக்கவேண்டும். பிள்ளைகள் அதிகமாயிருந்தால் ஒரு செடியை மாத்திரம் வைத்து வளர்ப்பதும் தண்ணீரில்லாத இடத்தில் பெருந்தோட்டத்தைப் பயிர் செய்பத் தொடங்குவதும் சீக்கிரத்தில் பயிர்செய்ய முடியாதவைகளைப் போட்டுப் பார்த்துக்கொண்டு காலங்கழிப்பதும் தவறுனகாரியம். தோட்டத்திற்கு வேண்டிய இடம், கிணறு அல்லது குளம் பள்ளிக்கூடத்திற்குச் சமீபத்தி லிருக்க வேண்டும். இவைகளைக்குறித்துப் பொதுவான சட்டங்கள் சொல்லமுடியாது. இவையெல்லாம் இடம் பொருள் ஏவலென்ற சௌகரியத்திற்கும் பிள்ளைகளின் தொகைக்கும் தக்கவாறு அங்கங்கே உபாத்தியாயர்கள் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டியது. தோட்டம் வைக்கவேண்டுமென்று தீர்மானித்தபிறகு சரியான இடத்தைக்குறித்துக்கொண்டு கூடியமட்டில் பெரிய பிள்ளைகளைக்கொண்டு முதலில் சிறிது கடினமான வேலைகளை வாங்கவேண்டும். தோட்டத்திற்குப் போவதற்கு முன்னர் உபாத்தியாயர்

ஒவ்வொருநாளும் செய்யப்போகிற வேலையைப் பற்றியும் அதற்கு உபயோகமான கருவிகளைப் பற்றியுஞ் சிறிது நேரம் பேசவேண்டும். திருஷ்டாந்தமாக முதல் நாள் வேலி போடுகிறதென்று வைத்துக்கொள்வோம். வேலியாலுள்ள உபயோகத்தையும் அதற்காக உபயோகிக்கப்படும் பலவித முட்செடிகளைப் பற்றியும் பேசலாம். பிறகு தங்களுக்குக் கிடைக்கக்கூடியதைவைத்துக்கொண்டு பெரியபிள்ளைகள் கட்டும்படிக்கும் சிறுவர்கள் அவர்களுக்கு வேண்டியவைகளை எடுத்துக் கொடுக்கும்படிக்கும் செய்யவேண்டும். இந்த வேலைகளெல்லாம் சீக்கிரம்முடியவேண்டுமென்றுஎண்ணிபிள்ளைகளை வெகுநேரம் வேலைசெய்யும்படி விடக்கூடாது. கால அட்டவணையில் ஏற்பட்டிருக்கும் நேரத்தில் எவ்வளவு வேலை முடியுமோ அவ்வளவு தினந்தோறும்செய்தால் போதும். இந்தப்படி இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வேலை செய்தபிறகு பூமியை வெட்டிச் சதுரப்படுத்தச் செய்யவேண்டும். சதுரப் படுத்துவதற்கு வேண்டிய ஆயுதங்களைப் பற்றியும் சதுரப் படுத்துவதின் பிரயோசனங்களைப் பற்றியும் பேச வேண்டும். பிறகு பாத்திகள் கோலுவித்துப்பூமியைக்கொத்தும்படி சொல்ல வேண்டும். உழுவது எதற்காக என்பதைப் பற்றி அவர்களைக் கேட்டுப் பலவிதமான கலப்பைகளைப் பற்றிப் பேச வேண்டும்.

கூடுமானால் பலவித மண் கொண்டுவந்து தோட்டத்தில் போடுவித்து ஒவ்வொன்றிற்குமுள்ள வித்தியாசங்களை அறியும்படி செய்யவேண்டும். பிறகு எரு என்பதென்ன? எவ்வாறு எரு சேகரிப்பது? எந்த எரு எந்தப்பயிருக்குநல்லது? எனவிசாரித்துப் பிள்ளைகளைச் சிறிது சிறிதாகத் தோட்டத்திற்கு எரு கொண்டுவந்து போடச் சொல்லவேண்டும். பல வித்துக்களைக் காண்பித்துத் தெரியாதவற்றின் பெயரைச் சொல்லி அவைகளை அடிக்கடி பார்க்கும்படி செய்து ஒன்றுக்கொன்று பகுத்தறியும்படி பழக்கவேண்டும். எக்காலத்தில் எவ்விதை சுலபமாக முளைக்குமோ அக்காலத்தில் அவ்விதையைக் கொடுத்து அவர்களை விதைக்கும்படிசெய்து எந்தெந்த விடத்தில் எந்தெந்த வித்துபோடப்பட்டிருக்கிறதென்பதைஞாபகத்தில் வைக்கும்படி செய்து சரிவரத் தண்ணீர் பாய்ச்சச் செய்யவேண்டும். எப்போது முளை கொள்ளுகிறது என்பதை உற்று நோக்கும்படியும் ஒவ்வொன்றுக்குமுள்ள வித்தியாசத்தையும், அவைகள் நாளுக்கு நாளடையும் மாறுபாடுகளையும் பகுத்தறியும்படியும் பழக்குவது அவசியம். களை பிடுங்குவதினுலுள்ள நன்மைகளையும் அவற்றை எவ்வாறு பிடுங்க வேண்டுமென்பதையும் அவர்களே அறிந்து கொள்ளும்படி முயலவேண்டும். இவ்வாறே ஒவ்வொரு செடி கொடியைப்பற்றிப் பேசித் தாங்கள் பார்க்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பிறகு தாம் செய்த ஒவ்வொரு வேலையையும் ஒரு புஸ்தகத்தில் பதிவு செய்து வைத்துக் கொள்ளும்படி செய்யவேண்டும். இப்படித் தோட்டத்தில் வேலை செய்வதில் முக்கியமாய் கவனிக்க வேண்டியவை சிலவுள. அவை வருமாறு:—

1. தோட்டவேலைதானேயென்று உபாத்தியாயர்கள் பிள்ளைகளை அனுப்பி விடக்கூடாது. அப்படிச் செய்தால் தோட்ட வேலையால் ஒருவித நன்மையுமுண்டாகாது.

2. பிள்ளைகள் ஒழுங்கீனமாயும் இரைச்சலிட்டுக்கொண்டும் இருக்கக்கூடாது. அவரவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வேலையைச் சரியாய் நடத்தும்படி பிள்ளைகளை நடத்தவேண்டும். பள்ளிக்கூடத்தில் எம்மாதிரி இருப்பார்களோ அம்மாதிரி நிலைமையில் சரிவர இருக்க வேண்டும்.

3. தோட்டத்தைச் சுத்தமாக வைக்கும்படி செய்யவேண்டும். எந்தெந்த விடங்களில் கருவிகளும் சாமான்களும் வைக்கவேண்டுமோ அந்தந்தவிடங்களில் ஒழுங்காக வைக்கும்படி செய்யவேண்டும்.

4. பிள்ளைகள் ஒருவருக்கொருவர் உதவி செய்யும்படியும், பிறகு தெரியாததைத் தெரிந்த பிள்ளைகளிடம் அறிந்து கொள்ளும்படியும் செய்தல் நன்று. பிள்ளைகள் தாமே பார்த்து அறிந்துகொள்ளக் கூடியவைகளை உபாத்தியா

யர் சொல்லாமல் தாமே கண்டு தெரிந்து கொள்ளும்படி தூண்டுவது நல்லது.

5. இயற்கைப்பாடத்தையும் வாசகபாடத்திலுள்ள அநேக விஷயங்களையும் தோட்டத்திலேயே கற்பிக்கவேண்டியது.

6. பிள்ளைகள் நெடுநேரம் வேலைசெய்து தளர்ச்சியும் வெறுப்பும் உண்டாகாதபடி உற்சாகமாக வேலை செய்ய ஜாக்கிரதையுடன் கவனித்தல் மிகவும் அவசியமானது.

7. தோட்டத்தில் ஒரேவித செடியையோ அநேகவித காய்கறி செடிகளையோ பயிர் செய்யாமல் பலவித பயிர்கள், கனிவர்க்கங்கள், அலங்காரமான புஷ்பச்செடிகள், புல் பூண்டுகள் என்னுமிவைகளைப் பயிர் செய்ய முயல்க.

8. முக்கியமாய் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. பயிர்செய்வதிலிருந்து வரும் பலனை உபாத்தியாயர் எடுத்துக்கொண்டு போய்விடக்கூடாது. தாம் பிரயாசைப்பட்டு வேலை செய்து பயிர்செய்தவைகளைத் தாம் அடையும்படியாகவும், அங்குப்புஷ்பிக்கும் பூக்களைக்கொண்டு பாடசாலையை அலங்கரிக்கும்படியாகவும் பிள்ளைகளைச் செய்தால் தான் அவர்கள் சந்தோஷத்துடனும் மிகுந்த அவாவுடனும் வேலை செய்வார்கள்.

9. ஒவ்வொரு வருஷமும் புதியதாகப் பயிர் செய்யும்பொருட்டு வித்துக்களை விலைக்கு வாங்கலும் பிறரிடமிருந்து சேகரித்தலும் கூடாது. ஆதலால் அந்தந்த வருஷப்பலனில் உண்டாகும் வித்துக்களில் மிகுந்த சிறந்தவைகள் இன்னதென்பதை பிள்ளைகளைக் கண்டறியும்படி செய்து அவைகள் அடுத்த வருஷம் உபயோகமாகும் வண்ணம் பத்திரமாய்க் காப்பாற்றிவைக்கவேண்டிய ஏற்பாடும் செய்ய வேண்டியது.

10. தோட்டவேலை நடக்கும்பொழுதே தங்கள் தங்கள் ஊரில் குடியானவர்கள் பயிர் செய்யும் மாதிரிக்கும் தாங்கள் பயிர் செய்யும் விதத்திற்குமுள்ள வித்தியாசங்களைப் பார்த்து வந்து சொல்லும்படியாகத் தூண்டவேண்டும்.

மேற் கூறியபடி தோட்டம் வைத்து நடத்தினால், அளவிறந்த நன்மைகள் உண்டாகுமென்பதற்கு ஐயமில்லை.

S. KRISHNASWAMI, B.A., L.T.

# ஸன்மார்க்கங்கள்
# இராஜாங்கமுறை சம்பந்தமான விஷயங்களைப் பற்றிய பிரதம கொள்கைகள்

## CIVICS ELEMENTARY PRINCIPLES

பிரஜைகளைத் தக்கவர்களாக ஆக்கவேண்டுமென்பதே இதைத்தன சம்பந்தமான கற்பனைகளின் நோக்கம்.

இராஜாங்கமுறை அதாவது (Civics) ஸிவிக்ஸ் என்னும் ஆங்கிலேய (English) பதம் நகரவாஸி என்று பொருள்தரும் ஸிவிக்ஸ் என்னும் லாத்தின் (Latin) பதத்திலிருந்து வந்தது.

என் அருமைக் குழந்தைகாள்! நீங்கள் வரவரப் பெரியவர்களாகிறீர்கள். உங்கள் பெற்றோர்கள் நாளடைவில் காலஞ்சென்று சமாதியில் அமைதியை அடைவார்கள். அக்காலத்தில் அவர்களின் ஸ்தானங்களை வகிக்க அருகராவீர்களா? குழந்தைப் பருவமுதல் நல்ல பிரஜைகளாகத் தயாராகி வந்திருக்கும் பக்ஷத்தில் அவ்வாறு ஆவீர்கள்.

2. நற்பிரஜை என்பவன் யார்? எவன் ஒருவன் தன் தேசத்தை அபிமானித்துத் தன் அரசினரை மரியாதையாய் மதித்துத் தனக்குரிய பாத்தியங்களைத் தெரிந்துகொண்டு, தன்னைப்போன்ற பிரஜைகளிடத்தில் தன் கடமைகளைப் பூர்த்தியாகச் செய்து வருகிறானோ அவன் தான் நல்ல பிரஜை.

ஒவ்வொரு தேச சரித்திரத்திலும் நற்பிரஜைகளுக்கு உதாரணங்கள் விசேஷமாய்க் காணப்படுகின்றன. தங்கள் இலாபநஷ்டத்தை எதிர்பார்க்காமலும், சுய ஊக்கத்தோடு சுய நன்மையைப் பாராட்டாமலும் சுதேச நன்மைக்காக அவர்கள் உழைத்தார்களென்றும்

OFFICE 24 JAN MADRAS

சமயம் வந்தபோது தங்கள் இராஜாக்களுக்காக உயிரை விட்டார்களென்றும், தங்களைப்போலவே பிறரையும் நேசித்தார்களென்றும், நாட்டைக் கொடுங்கோன்மையிலிருந்து காக்க மிகவும் பிரயாசைப்பட்டார்களென்றும் தெரியவருகிறது.

நாம் பிறந்து வளர்கிற தாய் பூமியாகிய இந்து தேசத்தின் பலமும் க்ஷேமமும் இந்துக்களுடைய ஒற்றுமை, நேசம், சுயநயம் பாராட்டாமை ஆகிய இவற்றின் தன்மையைப் பொறுத்திருக்கிறது என்று சரித்திரம் நமக்குக் கற்பிக்கிறது. "நாம் யாவரும் ஒருவனே, ஒருவனே யாவரும்" என்பது நமது கொள்கையா யிருக்கவேண்டும். ஆகையினால் நேசத்தோடும், ஜாக்கிரதையோடும், நமது சரித்திரத்தைப் படித்து, பூர்வீக ஆரியர் வம்சக்குழைந்தைகள் என்று சொல்லப் பாத்திரவான்களாக முயலல் வேண்டும்.

3. எது நியாயமோ அதுதான் சரி; சரியானதை நன்கு மதிப்பதே கடமையாம். இன்னது சரி, இன்னது தப்பு என்னும் உணர்ச்சி அல்லது பகுத்தறிவை சுவாமி நமக்குத் தந்திருக்கிறார். பிறர் உனக்குத் தீங்குசெய்வதை நீ விரும்பாததினாலே, நீயும் உன் அயலாருக்கு யாதொருதப்பும் செய்யக்கூடாது. அப்படிக்கில்லாமல் உனக்குப் பிறன் நன்மை செய்ய வேண்டுமென்று நீ விரும்புவதினாலே நீயும் பிறனுக்கு நன்மையே செய்யவேண்டும். கடமை தவறின் நியாயமில்லை. நீதி தப்பின் கடமையில்லையாம். நியாயமும்கடமையும் ஒரே நாணயத்தின் இருபக்கங்களாம். இது எனது உரிமை இது எனது பாத்தியம் என்றெப்போதும் சொல்லாதே. ஆனால் உன் கடமையை யோஜித்து அதை நிறைவேற்று.

4. மனிதன் எல்லா ஜனங்களோடும் சேர்ந்து வசிக்க வேண்டுமென்பதுதான் கடவுளின் நோக்கம். புத்தி யூகத்தினாலும், அனுபோகத்தினாலும் இவ்விஷயம் உண்மையென்று புலப்படும். நமது குழந்தைகளைத் தாய்தகப்பன்மார்கள், மற்ற பிராணிகளைப்போல்,பிறந்த பிற்பாடு சம்ரக்ஷிக்காமல் விட்டு விடும் பக்ஷத்தில் நமது சிறுவர்கள் வளர்ந்துவரக் கூடுமோ? மேலும் ஒரு மனிதன் தனக்கு வேண்டிய யாவையும் பிறர் உதவியில்லாமல் எவ்வாறு சேகரித்துக் கொள்ளக்கூடும். திடீரென்று ஒருவனை ஜனங்களில்லாத நடுக்காட்டிலோ, தீவிலோ கொண்டு போய் விட்டால் என்ன கஷ்டப் படுவான்? தற்செயலாய் ஒருமனிதனைக் கண்டால் எவ்வளவு சந்தோஷப்படுவான்?

அமெரிக்கா, ஆபிரிக்கா, ஓஷியானியா, ஆகிய இவ்விடங்களில் காணப்படும் நாகரீகமற்ற காட்டு மிராண்டிகள் முற்காலத்திலும் கும்பலாகச் சேர்ந்து வசித்துவந்தார்கள். இன்னமும் கும்பலாகவே வசிக்கிறார்கள். இதனால் மனிதனைக் கடவுள் தனித்து வாழ சிருஷ்டிக்கவில்லையென்று விளங்குகிறது.

ஒரு ஜன சமூகத்திற்கு விதிகளும் ஒழுங்கான ஏற்பாடுகளும் வேண்டும். பந்தாட்டம் கால் பந்து (Foot-ball) முதலிய சில விளையாட்டுகளுக்காக நீங்கள் ஒன்று சேர்வதாக வைத்துக்கொள்வோம். முன்னர் அவ்விளையாட்டிற்கு வேண்டிய சில நிபந்தனைகளை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள். ஒருவனைத் தலைவனாக ஏற்பாடு பண்ணுகிறீர்கள். எவன் அவ்விதிகளை மீறி நடந்தாலும் அவனை மோசக்காரனாகப் பாவித்துச் சரியானபடி தண்டிக்கிறீர்கள். ஒரு குடும்பத்தில் குழந்தைகள் கீழ்ப்படிந்து நடக்கத் தாய் தந்தையர்கள் சில விதிகளையேற்பாடு பண்ணுகிறார்கள். விதிகளை மீறி நடந்தவர்களைத் தண்டிக்கிறார்கள். ஒரு காட்டுச்சாதியாருக்கும், நாகரீகமடைந்த வகுப்பினருக்கும்விதிகளும், அவ்விதிகளை அமுலுக்குக்கொண்டுவர தலைவர்களும் வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் எல்லாம் ஒழுங்கு தவறி ஒரேகுழப்பமாகும். வலியவர்கள் எளியவர்களை வருத்துவார்கள். கபடிகள் பேதைகளை

ஏமாற்றுவார்கள். உரிமைகளும் கடமைகளும் ஒழிந்துபோம். முரட்டுத்தனமே வியாபிக்கும். ஒழுங்கான ஏற்பாட்டோடு கூடிய கூட்டம் என்னவென்றால் அதன் அங்கத்தினர்கள் அதாவது அதில் சேர்ந்த பிரதி நபர்களும் குடும்பத்தார்களும் அமுல் அதிகாரிகளின் விதிகளுக்கும், உத்தரவுகளுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதேயாம்.

6. பொதுவான விதிகளையும் ஒழுங்கான ஏற்பாடுகளையும் வகித்துள்ள ஒரு ஜாதியாரே ஒரு இராச்சியமாகும். இராச்சிய முழுமைக்கும் பொதுவான விதியே சட்டம். திருஷ்டாந்தமாக இங்கிலாந்து, ஜெர்மேனி, ஸ்விட் லாந்து, பிராஞ்சு, இத்தாலி, இந்தியா என்னும் இவைகள் இராச்சியங்களாம். இவைகளில் ஒவ்வொரு தேசத்திற்கும் பிரத்தியேகமான சட்டங்கள் உண்டு. அவை மற்றத்தேச ஜனங்களைக் கட்டுப் படுத்தா. மேலும் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி அரசர்கள் இருக்கிறார்கள். அவர்களின் அதிகாரம் தங்கள் இராஜ்யத்தின் வெளியே செல்லாது.

7. இராஜாங்க முறை நூலானது முதலில் நமக்கு நல்ல ஒழுங்குடன் ஏற்படும் எல்லாச் சங்கத்திற்கும் ஆதரவாயிருக்க வேண்டிய பொதுவான விதிகளைப் போதிக்கின்றது. பூகோள சாஸ்திரம் எப்படிக் கற்பிக்கப்படுகிறதோ, அப்படியேதான் இராஜாங்க முறை நூலும். மிகச் சிறிய குழந்தைகளுக்கு அவர்களின் சொந்த ஊரைப் பற்றியும் சுற்றுப்புற இடங்களைப் பற்றியும் பூமி சாஸ்திரம் போதிக்கிறோம். அவர்களுக்குத் தகுந்த வயசு வந்து கொஞ்சம் அதிகமாகத் தெரிந்து கொள்ளச் சக்தி உண்டானதும் பூமி உருவம், சமுத்திரங்கள், கண்டங்கள், முக்கிய ஆறுகள், மலைத் தொடர்கள், அதிக முக்கியமான நாடுகள் ஆகிய இவைகளைப்பற்றிப் போதிக்கிறோம். பூமியின்மேல் நமது தேசத்தின் இருப்பிடமும் தெரிந்துகொள்ளுகிறார்கள். கடைசியில் அவர்கள் தாய்பூமியைப்பற்றிய பூமிசாஸ்திரத்தை விஸ்தாரமாய் அவர்களுக்கு நன்மையுண்டாகும்படி போதிக்கின்றோம்.

அருமைக்குழந்தைகளே! கீழே நான் சொல்வதும் அம்மாதிரியே. தாய் பூமி, அரசாள்பவன், யூனியன் சங்கங்கள், பஞ்சாயத்து சபைகள், தாலூகா போர்டுகள், மியுனிஸிபல் சங்கங்கள், சுய அரசாக்ஷி, ஆகிய இவற்றின் சரியான பொருளை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியபோது, சுதேச, அந்நிய தேச ஆளுகைக்கு அவசியமான ஏற்பாடுகளைப் படிக்கும் சக்தி உங்களுக்கு உண்டாகும். நீங்கள் எந் நாட்டில் ஜனிக்கவேண்டுமென்பது கடவுளின் சித்தமோ அந்நாட்டை எவ்வளவு அதிகமாய் நேசிக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்களென்றும், உங்களுடைய தேசத்திற்குத் தகுதியாக உங்கள் அக்கம்பக்கங்களில் வசிப்பவர்கள், அரசன், கடவுள் என்னும் இவர்கள் விஷயமாக உங்களால் கூடியதைச் செய்வது எவ்வளவு பொறுப்பாகுமென்றும் பூரணமாய் அனுபோகத்தினால் அறிவீர்கள்.

## கள்ளு

என்னைக்குடித்தவர்கள் என்னைப் புகழ்ந்து [கொண்டாடிப்
பித்தம் பிடித்தவர்போல் பேசாதும் பேசிடுவார்
மானிடர்க்குள் நான்புகுந்து மாறாட்டம் செய்து [வைப்பேன்
சண்டைகளுமென்னாலே சவுரியமுமென்னாலே
ஆண்மைகளுமென்னாலே அடிதடிகளென்னாலே
குத்துவெட்டுமென்னாலே குடிகெடுவதுமென்னாலே
கீழ்விழுந்துமேல்புரண்டு கிடப்பதவுமென்னாலே
கச்சேரிகோர்ட்டுகளைக் கண்டறிவதுமென்னாலே
பெண்பிள்ளைதாலிவிற்றுப் பேர்கெடுவது [மென்னாலே
அழியாதசெல்வங்களை அழிப்பதுவுமென்னாலே
குறையாத செல்வங்களைக் குறைப்பதுவு [மென்னாலே
காணிவிற்பதுமென்னாலேகடன்படுவதுமென்னாலே
பூமிவிற்பதுமென்னாலே புண்படுவதுமென்னாலே
சபையிலுள்ளபேர்களெல்லாந் தலைகுனிவது [மென்னாலே
கொற்றவரும்மாதர்களுங் குணங்கெடுவது [மென்னாலே
மன்னர்களும் மாதர்களும் மனமழிவது மென்னாலே
சீச்சீயென்பதுமென்னாலே சீரழிவதுமென்னாலே
போபோவென்பதுமென்னாலே பொல்லாங்காவது [மென்னாலே
என்னுடையகெடுதிகளை எல்லாம் சொல்லப் [புகுந்தால்
எண்ணித்தொலையாது எட்டிலுமேயடங்காது
சொன்னசொல்லைக்கேட்டுநீரும் சுகம்பெறவே [வழிதேடும்
இல்லையென்றால் ஏமாந்து இழுக்கடைவீர்இதுநிசமே.

## சூதாடல்
### GAMBLING

சூதாடலாவது வஞ்சகத்தால் பிறர் பொருளை அபகரிக்க எண்ணங்கொண்ட கீழ் மக்கள் ஆடும் ஆட்டம். இது, முற்காலத்தில் வட்டு, கவறு, சதுரங்கம் என்னும் பகுப்பினை யுடையதாயிருந்தது. தற்காலத்திலோ அது, அவற்றோடு சீட்டு, உண்டையுருட்டல், சிங்கப் பொட்டு முதலிய பலவித பகுதிகளை யுடைய தாயிருக்கின்றது. கேட்டிற்கு வித்தாய சூதானது பண்டைக்காலத்தில் அரசர்களா லும் செல்வர்களாலும் ஆடப்பட்டு வந்தது. நாகரீகம் முதிர்ந்திருப்பதாக மதிக்கும் இக் காலத்திலோ செல்வராலும் தரித்திரராலும், அறிவுள்ளோராலும் அறிவில்லோராலும் ஆடப்பட்டு வருகின்றது. இது தருமத்திற் கும், பொருளுக்கும், இன்பத்திற்கும், வீட் டிற்கும் இடையூறாயுள்ள ஆட்டம். இவ்வாட் டத்தில் தமக்கு அவகாசமாயுள்ள நேரத்தைக் கழிக்க எண்ணி வேடிக்கையாக ஆடவழைப் பவர்போல் சூதில் வல்ல சூதர் செல்வர்களை ஆடவழைத்து,

"முற்சூது தாந்தோற்று
முதற்பணைய மவர்கொள்ளப்,
பிற்சூது பலமுறையும்
வென்று பெரும்பொருளாக்கி"

என்ற அருண்மொழித்தேவர் திருவாக்கிற் கேற்ப முதலாட்டத்தில் தோற்பவர்போல் தோற்றுத் தம்முடன் ஆடுவார்க்கு இன்ப மூட்டுவர். முதலில், சூதாட்டத்தில் வென்று பெறும் பொருள், இரையால் மறைந்த தூண்டி லிரும்பினை இரையென்று கருதி மீன் விழுங் கினாற்போலச் சூதர் சூதாட்டத்திலிருந்து நீங் காதிருக்கும்பொருட்டு இட்ட ஒரு தளையாகி, மற்றைத் தொழில்களையெல்லாம் கெடுத்துப் பின்னர்ப் பெருந்துன்பத்தையும் துயரத்தை யும் தாராநிற்கும். சூது துயரத்தைத் தவ றாது தருதலைத் தெரிவிக்கவே ஔவைப் பிராட்டியும், "சூதும் வாதும் வேதனை செய்யும்" எனக்கூறினர். ஆதலால் எவரும் சூதாடலா காது. மேலும் இவ்வாடலில் வெல்ல வல்லமை யிருந்தாலும் ஆடல் தக்கதன்று. ஆடினால் ஒன்றை முன்பெற்று இன்னும் பெறுவோம் பெறுவோம் என்னும் கருத்தால் நூற்றினை யிழந்து வறியவராவர். இதற்குச் சான்றாகச் சகலகலையு முணர்ந்து அறத்தின் வழிநின்ற தருமபுத்திரர் என்னும் மன்னர் பெருமான் இரு ந்ததாக அறநூல்கள் முறையிடும்.

பாண்டு புத்திரராகிய அம்மன்னர் கோன் அரசர்களை வென்று இராசசூயயாகஞ் செய்து முடித்துத்தன்சகோதரர்களுடன் அரசு புரிந்து கொண்டிருந்தனர். அக்காலத்து நயனமிலாத் திருதராட்டிரன் புதல்வனாகிய துரியோதனன் மறுமைக்கும் இம்மைக்கும் உறுப்புகளாகிய அறத்தையும் செல்வத்தையும் வேண்டாதான் என்றுசொல்லப்படத் தருமருடைய செல்வத் தைக்கண்டு களிக்காமல் பொறாமையைச் செய் துதன்மாமனாகிய சகுனியோடு அவர்பொருளை அபகரிக்குந்திறத்தைப் பற்றி விசாரங்கொண்டு விசாரிக்கையில் அவன்

"இப்பிறப் பொழிய வின்ன மேழெழு பிறப்பி னாலு
மெய்ப்பிறப் பற்ற நீதித் தருமனை வெல்ல மாட்
[டோம்
ஒப்பறப் பணைத்த தோளா யுபாயமெவ் வேனு
[மொன்றால்
தப்பறச்சூது கொண்டு சதிப்பதே கருமம்..."

என்று கூற, அரவக் கொடியோன் 'புன் பெருஞ் சூதுகொண்டு பொருவதே புந்தி' எனக்கொண்டு விதுரரை யனுப்பித் தரு மரைத் தருவிக்குமாறு தன் தாதையாகிய விழியிலாவேந்தற்கு உணர்த்தினான். விழியிலா வேந்தன், தன்னை வந்து காணுமாறு தருமருக்கு ஓலையொன்றெழுதி அதனை விதுரர் கையிற் கொடுத்து அவரைப் பாண்டவர் நகர்க்குப் போக்கினான். அவர் பாண்டவர்நகரஞ் சேர்ந்து தருமரைக் கண்டு வேந்தன் திருமுகத்தைக்

கொடுத்தனர். முரசக்கொடியுடைத் தருமர் திருமுகத்தை விதிப்படி வாங்கி வாசித்து வேந்தன் தன்னை யழைக்குங்காரணத்தை நீதி வழுவா நெறியுடைச் சிறிய தந்தையாகிய விதுரரிடம் கேட்டறிந்தனர். கேட்டறிந்த தருமர்

"அடியு மாண்மையும் வலிமையுஞ்
சேனையு மழகும்வென் றியுந்தத்தங்
குடியு மானமுஞ் செல்வமும்
பெருமையுங் குலமுமின் பமுந்தேகம்
படியு மாமறை யொழுக்கமும்
புகழுமுன் பயின்றகல் வியுஞ்சேர
மடியு மான்மதி யுணர்ந்தவர்
சூதின்மேல் வைப்பரோ மனம்வையார்."
"குழக ராயிள மடந்தையர்க்
குருகுவோர் குறிப்பிலா மையினும்
பழகு வார்மிகச் சிந்தைநோய்
தாங்களே படுக்குமா றுணராமல்
அழகு போறி வாகவே
கொண்டவ ரறத்தொழில் புரியாமற்
கழக மாடவும் பெறுவரோ
விதனினுங் கள்ளுண லினிதன்றே."
"மேத கத்தெரி ஞானநூற்
புலவரும் வேத்துநூ லறிந்தோரும்
பாத கத்திலொன் றென்னவே
முன்னமே பலபடப் பழித்திட்டார்"
(பாரதம்-சூதுபோர்ச் சருக்கம்)

என அறத் துறைகளை யெல்லாம் நினைத்துத் துக்கித்தனர். இவ்வாறு துக்கித்தாராயினும் காவலன் ஏவலை மறுக்க மனங் கொள்ளாராகித் தான் தன் சகோதரருடன் ஐம்பூதங்களும் நிகரென்னவும், ஐந்து காவும் பொருவென்னவும், ஐம்பணி முடியும் நேரென்னவும், ஐந்து வாளியு முறழ் வென்னவும், ஐந்து வேள்வியு மொப்பென்னவும், ஐந்து வாசமுந்தரமென்னவும், ஐவராக ஐந்து தேர்மேற்கொண்டுசென்று துரியோதனனுடைய நகரஞ் சேர்ந்தனர். சேர்ந்த ஐவரும் மூத்த தாதை, மூதாதை முதலிகளைக்கண்டு பணிந்து மாசுணக் கொடியோனாகிய கொடியோன் சபைக்கேகி அவனையுங்கண்டு அவனுடன் சரியாசனத் தமர்ந்திருக்கையில் சகுனியென்பான் தருமரை நோக்கி "ஆய வென்றியைய னில்லி லமுதமன்ன போனகம், போயருந்து மளவு மிங்கிருந்து போது போகவே நீயுமின்று சூதுகொண்டு நிகழ் விலாச மயிர் விரோ?" என்று வினவினன். அவ்வினவிற்குத் தருமர்

"மீதெடுத்த வஞ்சராகி
வெகுளிசெய்தல் பிறர்பெருங்
கோதெடுத் துரைத்தனன்பு
கொண்டயிர்த்தல் கொடியவெஞ்
சூதெடுத்து விழைதலுற்ற
சூள்பிழைத்த லின்னவே
தீதெடுத்த நூலின்முன்பு
தீயவென்று செப்பினர்"

எனத்தருமநூல் விதியினை யெடுத்துக்காட்டி அவன் வேண்டுகோளை மறுத்தனர். மறுத்தும் விடாணுகிக் கொண்ட கருமத்தில் கண்ணுயிருந்து அவரைப் பலவிதத்தால் மயக்கிச் சூதாடுவித்தனன். 'ஒன்றெய்தி நூறிழக்கும்" என்ற பொய்யாமொழி பொய்க்காதபடி தருமர் முதலில் மாமனை வென்று பின்னர் நூற்றுக்கணக்காய பொன்னினை யிழந்தனர். நூற்றுக் கணக்காய பொன்னினை மாத்திர மிழந்தனரன்று. உருளுங் கவற்றின்கட்பட்ட ஆயத்தை இடைவிடாது கூறி அரசன் சூதாடுவானாயின் அவன் ஈட்டிய பொருளும் அவன் பொருள் வருவாயும் அவனைவிட்டுப் போய்ப் பகைவர்கண்ணே தங்கும் என்னும் கருத்தமைந்த

"உருளாயமோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்"

என்னும் திருக்குறளின் உண்மையை விளக்குவார் போன்று தான் ஈட்டி வைத்திருந்த பொருளையும் அதன் வருவாயையுந் தோற்றனர். அறத்தையும் இன்பத்தையும் வீட்டையும் ஈட்டற்குரிய பொருளைக்கொண்டு அவற்றை யீட்டாது * "வட்டினுஞ் சூதினும் வான்பொருள் வழங்கிக் கெட்ட பொருளின்

* மணிமேகலை-ஆதிரைபிச்சையிட்டகாதை, வரி, 7, 8

கிளைகேடுறுதலின்" என்ற விடத்துக்கூறி யாங்கு அப்பொருளின் கிளைகளையெல்லாம்கவ ருடவில் வழங்கிக் கெட்டபொருளாக்கினர். 'சிறுமைபலசெய்துசீரழிக்குஞ் சூதால்'பாண்டு மைந்தர்பொருளையும் அப்பொருள் வருவாய்க் குரிய நாடு முதலியவற்றையு மிழந்ததன்றி "சூதென்னும் முகடியான் மூடப்பட்டு" சகோதரரையும்தன்னையும் மங்கலமென்றுசொல்லப்பட்டமாட்சிமையினையுடைய மனைவியை யுந்தோற்றனர். அறம்பொருளின்பங்கட் கடைத்த காலத்தைத் தருமர் சூதாடு களத்தில் கழித்தமையினன்றோ அக்கழிவு அவர்க்குரிய செல்வத்தைப்போக்கி நற்குணங்களைக் கெடுத்து அவரையும் அவர் சகோதரரையும் அவர் தேவியையும் இழக்கச்செய்து அதனோடு அவர்கள் அறுவரையும் காட்டிலுறைவித்தது.

''வெல்லுக வறமும் மெய்மையும் பொறையும்
• மேகமே னியனுமல் லாமல்,
செல்லுக பர்வம் பொய்மொழி
கோபந் தயித்தியர்குலம்'' எனத்

தெளிவுற்றிருந்த தருமபுத்திரரையே இச்சூதாட்டமானது பலவித துன்பத்துட் படுத்தி வருத்திய தென்னின் நம்போலியருக்கு அவ்வாட்டம் தன்குணத்தைக் காட்டா தொழியுமோ? ஒழியாது; தன்குணத்தைக் காட்டியே தீரும்.

இவ்வாடலினால் நாட்டை யிழந்தும், காட்டை யடைந்தும், 'குறுகுறு நடந்து சிறுகைநீட்டி,யிட்டுந் தொட்டுங், கவ்வியுந்துழந்து, நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து, மயக்குறு மக்களைத்' துறந்தும், மனைவியை விட்டுந் துன்பமடைந்த மன்னவர்கோன் வேறொருவனுமுண்டு. அவன் யாரெனில்,

"காமர் கயல்புரளக் காவிமுகை நெகிழத்
தாமரையிற் செந்தேன் றளையவிழப்-பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு" எனப்

புலவர்கள் புனைந்து கூறுஞ் சிறப்பினையுடைய நிடதநாட்டரசனாகிய நளமகாராஜன் என்பவனே. "வெற்றி நளன் சூதாடி வீடுவிட்டுக் காடுறைந்தான் சிற்றிடையுந்தானுஞ்சிவசிவா" என சென்ன மல்லையருங் கூறியுள்ளனர்; ஆகலின் நாட்டை யிழத்தல் காட்டை யடைதல் மக்களைத்துறத்தல் மனைவியைப் பிரிதல் என்னுமிவை இவனுக்குச் சம்பவித்த விதத்தைப்பற்றி இவ்வியாசத்தை முடிக்கு முன்னர் விசாரிப்பாம்.

சூழற் சோர்வையன்றி மற்றொரு சோர்வையுமறியாத மாவிந்தம் என்னும் நகரினை நிடத நாட்டிற்குத் தலை நகராகக் கொண்டு மாதர் ஊட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும் ஒரு கூட்டில் வாழ, செம்மையறம் சீதமதிக் குடைக்கீழ்த் தாழ, தாமரையாள் வைகுந் தடந்தோளினையுடைய நளன் என்னும் புரவலன் அரசு புரிந்து வந்தனன். அவ்வாறு அரசு புரியும் நாட்களில் ஓர்நாள் அம்மன்னன், மரமேறுதற்றொழிலில் வல்லமையுள்ள மந்திகளும் ஏறியிறங்குந் தொழிலை மறந்து நடந்துசெல்லும்படி மரங்கள் நெருங்கியசோலையொன்றினை யடைந்து, அங்கு, பொய்கையாடாமெய்ஞ்ஞானியர் உள்ளமேபோன்று சற்றும் அசைவிலாது தெளிந்து நிற்கும் நீரினையுடைய பொய்கையினை யண்மினன். அண்மிய அரசன் அப்பொய்கையுள் திருவளர் தாமரையொன்றில் அன்னநடை யாட்குமாருக அன்னநடையாளைத் தரவல்ல அரசவன்னம் ஒன்றிருத்தலைக்கண்டு அதனைப்பெறஅவாவியமனத்தனாய் நிற்க, அக்குறிப்புணர்ந்த மாதொருத்தி அதைப்பற்றி அவன்கையிற் கொடுத்தனன். கொடுத்ததும் அவ்வன்னம் முதலில் அஞ்சிப் பின்னர் மன்னன் தேற்றத்தெளிந்து தன்னைவருத்தாத அவ்விறைக்கு நன்மையொன்று புரிய நாடி விதர்ப்பதேயத்து மன்னனாகிய வீமனுடைய புத்திரியாகிய தமையந்தி என்னும் பெண்மணியின் சிறப்பினை யெடுத்தோதி 'மன்னா! அன்னாளே உன்றன் இசைமுகந்த தோளுக்கிசைந்தவள்' எனக் கூறியது. இதைக்கேட்டு

நளன் மனமுருகி "அப்பணை முலைக்கே, தேம் பற்றுடியிடைமான்மட நோக்கி தில்லைச்சிவன் ருள், ஆம்பொற்றடமலர் சூடுமென்னுற்ற லகற்றியதே" என அவ்வன்னம் "வீமன்றிரு மகளாமெல்லியலை யுன்னுடைய வாம நெடும் புயத்தே வைகுவிப்பேன்" என்று கூறி ஒடுங் கிடையாள் தன்பாற் சென்று "பெண்மணியே! நினக்கு வனப்பும் வனப்புக்கியைந்த குணமும் நன்கமைந்துள்ளன; இவை நல்லதோர் மணாளனைக் கூடிய காலத்தே விளக்கமுறும்: மணாளனைப் பொருந்தாக் காலத்துச் சந்திரனில்லாத ஆகாயமேபோல் பொலிவிழந்து கிடக்கும். ஆனதுபற்றி நினது நிறைகுணங்கட்கேற்ற நாயகனொருவனை நாடலே அமைவுடைத்து; அறங்கிடந்த நெஞ்சம், அருளொழுக கண், மறங்கிடந்த திண்டோள் முதலிய பெருஞ்சிறப் புடைத் தகவுறு நாயகனும் மாவிந்த நகரத் தரசனாகிய நளனையன்றி வேறொருவனுங் கிடையாது" என்றது. என்ற சொல்லைக் கேட்டதும் தமையந்தி மனத்துள் மையலே யுண்டாயிற்று. உண்டாகவே அவள் நளனை மணக்கும் நாட்டத்தை அன்னத்திற்குணர்த் தினள். அது கேட்ட அன்னம் நளனை அணுகி நடந்தவற்றைத் தெரிவித்தது.

இஃதிவ்வாறாக, தமையந்தி மன்னனையுன்னி வாட்ட முற்றிருந்தனள். இதனைச் சேடியர் அவள் தாய்க்குணர்த்த, அவள் தன் நாயகனிடஞ் சென்று செல்வி கவன்றிருத்தலை யறிவித்து, அக்கவற்சிக்குக் காரணம் அவளடைந் துள்ள மங்கைப் பருவமென்றும், அப்பருவத் தினை அவள் வீணிற் கழிக்கலாகாதென்றும் கூறி விரைவில் கடிமுடித்தற்குரிய ஏற்பாடு களையுஞ் செய்யச் சொல்லினள். வீமராசனும் மனைவியின் வேண்டுகோட்கிணங்கி சுயம்வரத் துக்கு நாள் குறித்து ஊர் தோறும் ஓலை போக்கினன். இதனைக் கேள்வியுற்று எல்லா மன்னரும் விதர்ப்பத்தையடைந்தனர். நளனும் அத்தேயத்தை நாடிச் சென்றனன். செல்லுகையில் வச்சிராயுதனும், அக்கினியும், தென் றிசைக்கோவும், வருணனும் நளனை மறித்துத் தம்முள் ஒருவர்க்கு அத்தமையந்தியை இசைவிக்கத் தூதாக அவள்பாற் செல்லுமாறு வேண்ட அவன் அவர்கள்பணியைத் தலைமேற் கொண்டு அவளிடம் பிறரறியாவண்ணம் உருக்கரந்து சென்றனன். உருக்கரந்து வந்த நளனைக் கண்ட வளவில் தமையந்திக்கு வியப்பும் அச்சமும் உண்டாயிற்று. அவை யுண்டானபோதிலும் அவைகளை ஒருவாறடக்கி அவன் வரலாற்றினை விசாரித்தறிந்து அவன் வேண்டுகோட் கிணங்காது அவன் தோட்கிணங்கும் கருத்தினை வெளியிட்டுணர்த்தி யனுப்பினாள். அவன் அவளை நீத்து விண்ணவர்பாற் சென்று அவள் கருத்தினை யறிவித்தான். அவர்கள் இவனுடைய மெய்ப்பணிக்குவந்து வரங்கொடுத் தனுப்பினர். அவன் மறுபடியும் மாவிந்தஞ் சென்று மன்னரீண்டியுள்ள சுயம்வர மண்டபத்தை யணுகினான்.

பாங்கியர் தமையந்தியை அலங்கரித்து மண்டபத்திற்கழைத்துச்சென்று அங்குள்ள ஒவ்வொரு மன்னவனையும் அவட்குச் சுட்டிக் காட்டி அவர்கள் ஊர், பெயர் முதலியவற்றைக் கூறிவந்து முடிவில் நளனைக் காட்டினர். அப்பொழுது தமையந்தி அவற்கு மணமாலை சூட்டினள்.

அதைக்கண்டு மற்றைய அரசிளங்குமரர் அருக்கோதயத்துச் சந்திரன்போல முகம் வெளுத்துப் பொலிவிழந்து தத்தம் நாட்டை நாடி யோடினர். பின்னர் வீமன், தன் புத்திரிக்கும் நளனுக்கும் இனிதாகக் கடி முடித்தனன். கடிமுடிந்த பின்னர் மணமக்களிருவரும் "பெரும் போகம் பின்னும் புதிதாகச்" சின்னாள் அவ்விடம் இன்புற்றிருந்து பின்னர் அதைவிட்டு மாவிந்தஞ் சென்று சேர்ந்தனர். சேர்ந்த சிலகாலத்திற்குள் அங்கு,

*"யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா பொருளறி வாரா"

* புறநானூறு 92-வது பாட்டு

மழலைச் சொற்களையுடைய புதல்வரிருவரை அவர்கள் தவப்பயனால் பெற்றெடுத்துக் களிப்பாங் கடலுள் ஆழ்ந்திருந்தனர். அவ்வாறு இருந்துழி ஓர்நாள் நளமகாராசனைக்காண அவன் தமையனாகிய புட்கரன் என்னும் சிற்றரசன் வந்தனன். வந்ததமையனை முறைப்படி உபசரித்தழைத்து ஆசன மளித்தனன். புட்கரனும் சில நேரம் நளமகாராசனுடன் அன்புடன் பேசி அவனைக்கவறாடலுக்கழைத்தனன். நளன் அவ்வாடலைக் கனவினுங் கருதாதவனாயினும் "பேதைப்படுக்குமிழவூழ்" என்றபடி இழவூழ் பேதைப்படுத்த அவன் அதற்குச் சம்மதித்தனன். இதனையுணர்ந்த அமைச்சர்

"அறிகொன் றறியா னெனினு முறுதி
உழையிருந் தான்கூறல் கடன்"

என்னும் பணியை மேற்கொண்டு சூதாட்டத்தால் வரும் விளைவினை அரசற்குப் பின்வருமாறு எடுத்துரைத்தனர்.

"ஐயநீ யாடுதற் கமைந்த சூதுமற்
றெய்துநல் குரவினுக் கியைந்த தூதுவெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக் கீன்றதாய்
மெய்யினுக் குறுபகை யென்பர் மேலையோர்"

"காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழித
லீதன் மறுத்த லிவைகண்டாய்—போதிற்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி"

"அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்குந் [தையே
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கு—மறத்
பூண்டவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்க
ளுண்டுவரோ வென்றூர் தெரிந்து"

"உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கு—மருவு
மொருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து"

"ஆயம் பிடித்தாரு மல்லற் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்ல ரென்றுரைப்ப தன்றே
வடித்தாரின் னூலோர் வழக்கு."

அமைச்சர் இவ்வாறு நீதிகளை யெடுத்தோதியும் நளன் கேளானாகி

"தீது வருக நலம்வருக சிந்தையாற்
சூது பொரவிசைந்து சொல்லினேம்-யாதும்
விலக்கலிர்நீ ரென்றான்" கனன்று.

அதுகேட்டு அமைச்சரும் மற்றையோரும் அரசற்கு விதி வழியே மதி செல்லுகின்றது போலும் என நினைத்து வாளாவிருந்தனர். அரசன் புட்கரன் சூழ்ச்சிக்குள்ளாகி அவனுடன் கவறாடி நாடுநகர் முதலியவற்றைப் பணையமாக வைத்து அவற்றை யிழந்தனன். இழந்த பின்னர் புட்கரன் தமையந்தியைப் பணையமாக வைக்கும்படி வற்புறுத்த, அதற்கு அவன் உடன்படாது அவளையும் மக்களையும் அழைத்துக்கொண்டு நாடொரீஇக் காடு சேர்ந்தனன். காடுசேர்ந்து கவன்ற மனத்துடன் தன் காதலியைக் காதலருடன் வீமதேசம் போகும்படி சொல்ல அவள் அதற்குச் சம்மதியாததுகண்டு தஞ் செல்வரை மாத்திரம் சுமந்திரன் என்னும் தன் மந்திரியுடன் கூட்டி மாவிந்தநகர்க் கனுப்பினன்.

பின்னர், நளன் தன் நாயகியோடும், காட்டில் உறைந்திருந்தனன். அவ்வாறிருக்கையில் அவ்விடத்து அன்னப் பறவைகள் வாவியுள் தங்கி விளையாடுவது கண்டு தமையந்தி அவற்றுள் ஒன்றைப் பிடித்துக் கொடுக்குமாறு நளனைவேண்டினள். நளன் அவளது வேண்டுகோளுக்கிரங்கி, தன்னுடையை யவிழ்த்து அவற்றின்மேல் வீசினான். அவை அதனைப் பற்றிக்கொண்டு பறந்து சென்றன. மன்னன் தன் தீவினைப் பயனை யெண்ணி அரையில் ஆடையுமின்றி வருந்துகையில் இறைவன்படும் இன்னலைக் காணவொண்ணாதவன்போல இரவியும் மேற்கடலுள் ஆழ்ந்தனன். அக்காலத்து, பேரிருள் கவிந்துகொண்டது. மன்னன் ஆண்டிருந்ததோர் பாழ்மண்டபத்தில் தன் மனையாளோடுந் தங்கினன். தமையந்தி வழிநடந்த மெலிவாலும், மக்களைப்பிரிந்த துயராலும் சோர்வுற்றுப் படுத்தனள்.

அங்கு அவளுக்குப் புழுதியே பூவணையாய் இருந்தது. அவள் தன் தலையைத் தலைவன் தொடையின்மீது வைத்துக்கொண்டு துன்புற்ற மனத்துடன் உறங்கினள். இவள் துயரினைக்கண்டு தரியாளுகி, நளன், அவள் உறங்குழி, அவளுடைய ஆடையிற் பாதி கொண்டு அவளறியாவண்ணம் நளையிருளில் அவளை நீத்து நீங்கினன். நீங்கியபின்னர் தமையந்தி துயிலொரீஇத் தன் தலைவனைக்காணுது பெரிது மிடர்ப்பட்டு முடிவில் ஒருவாறு மனந்தேறி சேதிநகரஞ்சென்று அங்குச் சிலகாலந் தங்கிப் பின்னர் வீமபட்டணஞ்சென்று சேர்ந்தனள்.

தருமநூல் எல்லையினை நன்குணர்ந்த நளமகாராசனும் * "செம்மை சுடு செந்தீக் கைதவநுனித்த கவருடல்" ஆடுதலினுல் அளவில் துன்பமுற்றனன் என்பது மேற் கூறிய கதையால் பெறப்படுகின்றது. ஆதலின் அவ்வாடலைக் கனவினும் நினையாதிருப்பதே செம்மைபெறவேண்டுவார்செய்யவேண்டுவது. சூதாடலை விரும்பினவர், வெல்லினுந் தோற்பினும் ஒருபொழுதும் அச்சூதைவிடாது, தங் காலத்தையும் கருத்தையும் அதிலேதான் போக்குவர். சூதானது தோல்வியினுலே பொருளைக் கெடுத்துக் களவை விளைவித்து, வெற்றி பெறுதற்காகப் பொய்யை மேற்கொள்ளப் பண்ணிப் பகையை விளைவித்தலால், அருளைக்கெடுத்து, இம்மை மறுமை இரண்டினுந் துன்பத்தையே அடைவிக்கும். ஆதலால் அத்துன்பத்தை யடையாதிருத்தற் பொருட்டு அவ்வாடலை விரும்பாதிருத்தலே தகவுடைத்து.

சே. சோமசுந்தரப்பிள்ளை.

* சீவகசிந்தாமணி—முத்தியிலம்பகம்.

# விருந்தோம்பல்

## HOSPITALITY

"மருந்தேயாயினும் விருந்தோடுண்" என ஔவையார் கூறியதற்கிணங்க, எக்காலத்திலும் எந்நாட்டிலும் அதிதிகளை உபசரித்தல் மேலான தருமமாக எண்ணப் பட்டுள்ளது. எல்லாமத நூல்களிலும் மதாசாரியர்கள் நிர்க்கதியாய் வருகிறவர்களுக்கு அன்னம் முதலான தானங்களைச் செய்தலே ஈசுரகடாக்ஷம் பெறுவதற்குச் சுலபமான வழியென்று கூறியுள்ளார். பரதகண்டமாகிய நமது நாட்டில் அதிதி பூஜையைப்பற்றி உயர்வாகப் பேசாத நூல்கள் இல்லை. இதர நாடுகளிலும் இவ்வாறே இருக்கிறது என்பது விளங்க அடியில் ஓர் கதையை எழுதுவாம்.

அநேக ஆயிர வருஷங்களுக்கு முன் மேற்கு நாட்டில் பைலிமன் என்னும் விருத்தனுக்குப் பாஸிஸ் என்பவள் மனைவியாக அமைந்திருந்தாள். இவர்கள் மிகுந்த ஏழைகளாயினும்விருந்தினராக எவர் வரினும் தமக்குள்ளதைப் பகிர்ந்து அவர்களுக்குத் திருப்தி செய்தே தாம் உண்பார்கள். இவர்கள் வீடு ஒரு சிறு குடிசை. அது தனியான ஓர் மேட்டில் கட்டப்பட்டிருந்தது. நாடோறும் தம் உழைப்பால் கிடைக்கும் பொருளை வைத்துக்கொண்டு ஜீவனம் செய்து வந்தார்கள். இவர்கள் குடியிருந்தஇடத்திற்குச் சமீபத்தில் ஓர் பள்ளத்தாக்குண்டு. அது நீர்வளம் நிலவளங்களால் மிகச்செழிப்புற்றது. அங்குள்ள மனிதர்கள் மாட மாளிகைகளில் வசித்துக்கொண்டு செல்வச் செருக்கடைந்து பிச்சைக்காரர்களைக் கண்ணுலும் பார்ப்பதில்லை யென்ற விரதம் பூண்டு வந்தனர். எவனுவது யாசகன் ஊரார் குணமறியாமல் தவறி வந்துவிடுவானுயின், அவர்கள் அவனை, நாய்களைத்தூண்டியும் கல்லையும் மண்ணையும் விட்டெறிந்து துரத்தித் துன்பப்படுத்தி வந்தவனுக்கு ஒரு கவள

அன்னமும் கொடாமல்
"வாழ்ந்தன மென்று தாழ்ந்தவர்க் குதவாது
தன்னுயிர்க் கிரங்கி மன்னுயிர்க் கிரங்காது
உண்டிப் பொருட்டாற் கண்டன வெஃகி
அவியடுநர்க்குச் சுவைபகர்ந் தேவி
ஆரா வுண்டி யயின்றன ராகித்
தூராக் குழியைத் தூர்த்து
... ... கேளிகழ்ந்து
இகமும் பரமும் இல்லை யென்று
பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி
மின்னி னனையதன் செல்வத்தை விரும்பித்
தன்னையு மொருவராக' உன்னி இருந்தனர்.
(திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 7வதுபாட்டு)

இந்த இரக்கமற்ற பாவிகளால் வெருட்டுண்ட ஏழைகள் பைலிமன், பாஸிஸ் வீட்டுக்கு வந்து வயிறாரவுண்டு வாழ்த்திப் போவது வழக்கம்.

"அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்" அல்லவா? உலக வின்பங்கள் அனுபவித்தற்கு வேண்டிய ஸகல பொருள்களும் அளவில்லாது உடையராயினும் பிறர்க் குதவியைச் சொப்பனத்திலும் செய்ய எண்ணாத பாவிகளிடத்தில், தாமே நேராகப் போக தேவராசனும் அவன் தூதனும் தீர்மானித்துக்கொண்டு கந்தையாடை தரித்து அறுபது வயதுக் கிழவனும் இருபத்தைந்து வயதுள்ள யௌவன புருஷனும் இருவரும் முறையே உருமாறி அவ்வூர்க்கு மாலைவேளையில் வந்தார்கள். நாய்களுக்கு இயற்கையாகவே பிச்சைக் காரர்களிடத்தில் பகைமையுண்டு. பிறர் தூண்டாமலே அவைகள் குரைக்கும். தூண்டிவிட்டால் நாய்கள் செய்வதைச் சொல்லவும் வேண்டுமோ? அவ்வூர்ச் சிறுவர் சிறுமியரும் நாயின் இயல்பினராம். சுவானங்கள் குரைத்துத் தேவராசனுடைய கந்தையாடைகளைப் பற்களாற் பிடித்திழுக்க, சிறுவரும் சிறுமியரும் மண்கட்டிகளையும் கற்களையும் வீசினார்கள். ஒரு நாய் சிறுவனைக் கடிப்பதற்கு வர அவன் கையிலுள்ளகோலால் நாயின்வாயில் அடித்தான். அதுகுரைத்துக்கொண்டு ஓடிற்று. மற்ற நாய்களும் அருகில் வரத் துணிய வில்லை. மண்ணையும் கல்லையும் வீசினவரும் சிறுவன் கையிலுள்ள தண்டத்தைக் கண்டஞ்சி ஓடினர். தேவராசனும் அவன் தூதனும் அன்று மாலையிற் பட்டபாடு ஏழு எட்டு ஜன்மங்களுக்குப் போதும். நடைமெலிந்து அவ்விருவரும் இருட்டிப்போன பிறகு பைலிமன் வீட்டிற்கெதிரே வந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் பைலிமன் குளிர்ந்த முகத்தோடு அவ்விருவரையும் உபசரித்துத் தன் இல்லத்திற்கு வரும்படி அழைத்தனன். தேவரிருவரும் மனமுவந்து அங்குச் சென்றனர். அவ்வீடு சிறு குடிசை யென்று முன்னமே சொல்லியிருக்கின்றோமல்லவா? தேவர் திருவடிகள் தன் குடிசையிற்படும்படியான பாக்கியம் எல்லாச் செல்வத்திலும் மேலானதன்றோ? இருவருக்கும் பைலிமன் ஆசனமளித்துத் தன் மனைவியை அழைத்து வீட்டிலுள்ள உணவுகளை விருந்தினர்க்குப் பரிமாறும்படி கட்டளையிட்டான். "இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன்வாங்கி, விருந்து வந்ததென்று விளம்பவே, இருந்தவள் ஆடினாள், பாடினாள் ஆடிப் பழமுறத்தால் சாடினாள், ஓடினான்றான்" என்னும் பாடலில், கணவன் துஷ்டையாயிருந்த தன் மனைவியின் மனமிளகும்படி, அவளுக்குத் தலைவாரி, ஈரும்பேனுமெடுத்து மெல்ல "விருந்தாளி ஒருவன் வந்திருக்கிறான்" என்று சொல்ல, மனைவி ஒரே குதியாய்க் குதித்து அங்குள்ள முறத்தாற் கணவனைப் புடைக்க அவன் ஓட்டம் எடுத்தானென்று கூறியிருப்பதுபோல் பைலிமனுக்கு வாழ்க்கைப்பட்ட பாஸிஸ் செய்யாது புருஷனைத்தவிர வேறு தெய்வமில்லையென்றும், அவன் வாக்கே வேத வாக்கென்றும் உறுதிப்பட்டமனத்தால் விருந்தினர்க்குத்தக்கவிருந்து செய்யத்திரவியமில்லையேயென்று வருந்தினள். 'நமக்குள்ளதை யுண்ண இன்னொரு பாவி வந்தானே' என்று எண்ணினவளேயன்று. தேவரிருவர் வந்ததினத்தில் அவள்வீட்டில்ஒரு

சேர்பாலும், ஒரு சிப்புப்பழமும், ஒரு அப்பமுமேயன்றி வேறொன்றுமில்லை. தானும் தன் கணவனும் உண்பதற்கு முன்னரே விருந்தினர் வாராமற் போய் விட்டார்களே; முன்னரே வந்திருப்பின், தமக்கு வைத்திருந்தன வற்றையும் அதிதிகளுக்களித்து மனம் பூரிக்கலாமே யென்று வருந்தினள்.

சிறுவன்கையில் ஒரு தண்டமிருந்ததென்றோம். அக்கோலின் தலையில் இரண்டு பாம்புகள் ஒன்றின் முகம் மற்றொன்றின் முகத்தோடு பொருந்தும்படி இணைந்திருந்தன. இன்னும் அக்கோலை ஓர் மூலையில் சாத்தி வைத்துக் கூவினால் அது நடந்துவரும். மந்திரமேறிய ஓர் மாத்திரைக் கோலாம் அத் தண்டம்.

தேவராசனும் அவன் தூதனும் உண்ண ஆரம்பித்தனர். பாஸிஸ் அவர்களுக்குப் பாத்திரங்களில் பாலை வார்த்தாள். அவர்கள் அதைப் பருகி அதன் இனிப்பை மெச்சி இன்னும் கொஞ்சம் பால் வேண்டுமென்றார்கள். அப்பெண் மதிமயங்கி நின்றாள். பாற்கலத்திலோ கரண்டியளவுபால் தானுள்ளது. அவ்விருவருக்குந் தேவையாயிருப்பதோ மிகுந்த அளவையுள்ளது. பாஸிஸ்மனம் அக்காலத்தில் தபித்ததை என்னென்று சொல்வோம்! அவள் மனக்கலக்கத்தைக் கண்ணுற்ற தேவதூதன் "அம்மணி, உன் மனம் கலக்க முறுவானேன்? பாத்திரத்தைக்கவிழ்த்தால் பால் தானே சுரக்கும் பயப்படவேண்டாம்," என்று சொல்ல, தெய்வத்தை நம்பிப் பாற்கலசத்தைக் கவிழ்த்தாள். ஆச்சரியம்! ஆச்சரியம்! எத்துணை முறை கவிழ்த்தாலும் நறுமணம் வீசும் தீம்பால் தாரைத்தாரையாய்சுரந்தோடிவந்தது. பாஸிஸ் "இது தெய்வச்செயலன்றி மானிடர் செய்கையன்று. கடவுள் பெருமையை அறியவல்லார் யார்," என்று நம்பி விருந்தினர்க்கு வேண்டியவற்றைச் செய்து வந்தாள். பழச்சிப்பும் எடுக்க எடுக்கக் குறையவில்லை. அப்பமும் உண்ணஉண்ண முன்னிருந்தவவுண்ணமேயிருந்தது. தேவதூதன் பாஸிஸுக்கு வியப்பு அதிகரிக்கும் பொருட்டுத் தன் மாத்திரைக்கோலிலுள்ள ஸர்ப்பங்களைக் கீழே இறங்கச் செய்து அவற்றிற்குப் பாலூட்டினான். பைலிமன்பாஸிஸும்இந்த அற்புதங்களையெல்லாங்கண்டு திகைத்துநின்றனர். புத்தி தெளிந்தபிறகு விருந்தினருக்குக் குளிரடக்கமான தமது அறையில்பாய் போட்டு வைத்துப் படுக்கச்சொல்லி வீட்டிற்குடையதாமிருவரும் தெருத்திண்ணையிற் படுத்துறங்கினார்கள். தேவராசனும் அவன்தூதனும் இந்தத் தம்பதிகளின் உத்தம குணங்களைக் கண்டு மிகவும் விருப்புற்றார்கள் என்றும், இவர்களபக்கத்திலுள்ளவர்களுடைய உலோப குணத்தைக் கண்டு வெறுப்படைந்தார்களென்றும் எவரும் தெரிந்து கொள்ளலாம். தேவர் இருவரும் இரவில் நன்றாய் நித்திரை பண்ணி உதயத்தில் தம்மை யுபசரித்த தம்பதிகளைக்கூவி ஆசீர்வதித்துச் சில மொழிகளைக் கூறினார்கள்.

பைலிமனை நோக்கித் தேவராசன் "பைலிமா உன்னண்டையிலுள்ளோர் ஏன் பாவிகளாயுள்ளார்? உன் தயாள குணத்தில் எள்ளளவேனும் அவர்களுக்கில்லையே. நீ பரம ஏழையாயிருந்தும் பூத தயையுடையவனா யிருக்கின்றாய். அவர்களோகுவியல்குவியலாய் ஐச்சுவரியமுடையராயிருந்தும் எச்சிற்கையால்கூட காக்கையும் ஒட்டாத கர்மிகளாயிருக்கின்றார்கள். அவர்கள் குடியிருக்கும் பிரதேசம் முற்காலத்தில் ஒரு ஏரிப் பள்ளமாக இருந்ததை நீ அறிவாயா?" என்றான்.

பைலிமன்.—என்ஞாபகமெட்டின வரைக்கும் அது குடியேறிய ஊராக இருந்ததை நான் கண்டிருக்கிறேன். என் பிதாவின் காலத்திலும் அவ்வாறேதான் இருந்ததாம். அதற்கு முன் எப்படி இருந்ததோ எனக்குத் தெரியாது.

தேவராசன்.—இப்போது அங்குவீடுகளும் ஜனங்களும் உண்டா?

பைலிமன்.—திரும்பிப் பார்த்து வீடு வாசல்கள் நிரம்பிய இடம் ஒருபெரிய ஏரியாகி மாறித் தவளைகளும் சுறுமீன்களும் நிரம்பிய ஜலாசயமாய்த் தோற்றியது. "அந்தோ! அங்குள்ள ஆண், பெண், மக்கள், ஆடுமாடுகள், எல்லாம் அழிந்தனவே! இது கொடுமை, இது கொடுமை" என்று பலமுறை கிழவன் வாய் குழறி நா தழதழத்து அலறினன். தேவேந்திரன் மனமிரங்கி "அப்பா, நீ விசனப்படாதே. கடவுள் நமக்குப் பொருளைத் தருவது நமது சுயநயத்திற்கு மாத்திரமன்று. எஞ்சிய பொருளைக் கொண்டு இரவலர்க்கு உபகாரஞ் செய்வதற்காம். உன் அயலாராயிருந்த பாவிகள் எவருக் காவது பிச்சையிட்டதை யறிவாயா? ஈயார் தேட்டைத் தீயார் கொள்வரன்றோ?. தீயாலிறக்காவிடினும் நீரால் இறந்தார்கள். இஃது தேவர்கள் கொள்கை. உனக்கு நாங்கள் கொடுக்கக்கூடிய வரங்கள் எவையோ அவற்றை நீ அச்சமறக் கேட்பாயாக" என்றான்.

பைலிமனும் அவன் துணைவி பாஸிஸ"ும் தேவர்கள் இருவரையும் வணங்கி "பெரியோர்களே, நாங்கள் இருவரும் வெகு காலமாய் ஒரே மனத்தராய்க் காலங்கழித்து இயன்றவளவு எளியோர்க் குபகாரஞ்செய்து கொண்டு வந்து விட்டோம். ஒருவர் பின் ஒருவர் மரணமடையாமல் இருவரும் ஏக காலத்தில் தேகவியோக மடைய வரந்தரல் வேண்டும்" என்றார்கள். "அப்படியே ஆகுக" என்றார் தேவரும்.

பின்பு அவ்விரு முதியோரும் தம்வீட்டைப் பார்க்க, குடிசையிருந்த இடத்தில் ஸலவைக் கல்லாலமைந்த மாளிகை ஒன்றுண்டாயிருந்தது. தேவர்களைக்கண்டு நன்றி பாராட்டலாமென்றாலோ, அவ்விருவரும் அந்தர்த்தானமாய்விட்டார்கள். வீட்டிற்குள் நவரத்தினமும், பொன்னும், தானியங்களும் குவியல் குவியல்களாய்க் கிடந்தன. பைலிமனும் பாஸிஸ"ும் விருந்தினர்க்கு விடாயாற அன்னமிடலுக்குக் கடவுள் தமக்குப்பொருட்குவியல்களை அளித்திருப்பதாக எண்ணினார்கள். அன்றுமுதல் அவ்விருவருடையமாளிகை ஓர்சத்திரமாயிருந்தது. ஒருநாள் விருந்தினர் உண்ணும்பொழுது அந்தத் தம்பதிகளிருவரும் சடிதியில் மறைந்து வாயிற்புறத்தில் இரண்டு ஸாலை விருக்ஷங்களாக மாறி ஒன்றின் கிளைகள் மற்றொன்றின் கிளைகளோடு பின்னிக்கொண்டு வெயிலிற்களைத்து வரும்பாட்டைசாரிகளுக்குத் தண்ணிய நிழலைத் தந்து காற்று வீசும்போதெல்லாம் "பைலிமன்-பாஸிஸ்" என்னும் பெயர்களைப் பாட்டாகப் பாடிக்கொண்டு கண்டோரும் கேட்டோரும் களிப்புற விருந்தார்கள்.

கே. வேங்கடராமய்யர், பி. ஏ.

இளமையில் மனத்தை ஈசன்பால் செலுத்துக.—புதியதாய்ப் பிறந்த பசுவின்கன்று மிகவும் களிப்புடனிருக்கின்றது. அது கும்மாளித்துக் கொண்டு அங்கு மிங்கு மோடித் தன் தாயினிடம் பாலுண்ணுகையில் மாத்திரம் ஓய்ந்து நிற்கின்றது. அது தும்புக்கயிற்றால் கட்டுண்ணப்பட்ட வுடனே மெலிவுற்று அதன் களிப்பு நாளடைவில் நீங்கித் துரும்பாய் இளைத்து விடுகின்றது. அதுபோலச் சமுசாரக் கவலைகள் இல்லாத வரையில் சிறுவன் சுகமாயிருக்கிறான். அவன் விவாகம் என்னும் பந்தத்தால் கட்டுண்டு குடும்பம் என்னும் பெருங்கல்லை அவன் தலையில் சுமந்ததும் வேடிக்கை விநோதங்கள் தலை காட்டாதோடுகின்றன. அவன் முகம் சந்திரனைக்கண்ட தாமரைபோல் கூம்புகின்றது. கபோலத்தில் காந்தி மங்குகின்றது. நெற்றியில் திரை வீழத்தலைப்படுகின்றது. எவனொருவன் காலைக் காற்றே போல் தாராளமாயும் அன்றலர்ந்த மலரே போல் அபிநவமாயும் பனித்துளியே போல் பரிசுத்தமாயும் இருக்கப் பாலனைத்தன் ஆயுள் முழுவதையுங் கழித்து இறைவனிடத்தில் மனத்தைப் பதிக்கின்றானோ அவனே பாக்கியவான்,

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### கிழவனும் பிள்ளைகளும்

பெருங்குடி யாளன் பெருமையிற் சிறந்தோன்,
மருவிலா குணத்தன், தன் மகாரவ ரென்றும்
ஒருமை யின்றி புணர்வு கலங்கி
பிரிந்து தம்முட் பேர்கெட உழன்று
தாழு நிலைமையைத் தாங்கலா தவரைக்கூஉய்
"மக்காள்! வம்மின் வரி* யமைச் சுள்ளியாம்
இக்கட்டை முறியீர்!" என்னலும் கேட்டு
நால்வரும் நானுழி தனித்துக் கூடியும்
மேலுங் கீழும் புரட்டியுந் தள்ளியும்
வியர்வை அரும்ப வீசிய
அயில்சேர் கோடரி அயர்ந்து மழுங்கவும்
காஷ்டக் கட்டு கண்டப் படாததும்
நோக்கித் தந்தையும் "நுண்ணுணர்வுடையீர்!
சேர்க்கையின் கட்டையை வேறுவே றாக்கி
துண்ட மாக்குதி துணைவலி யின்" றென
கண்ட துண்டமாகக் கரும்பினை யொடிப்பபோல்
கோடரி யின்றி, கொள்துணை இன்றியும்,
தாடகக் கையினால் சாய்த்து வீழ்த்தியதைக்
காட்டியப் பெரியோன் "மக்காள்! காண்டீர்!
உம்முள் ஒற்றுமை உடையீ ராயின்
† வெம்மையோர் செயற்கு வீழா‡ தந்த
காஷ்டப் பொதியெனக் கலங்கா திருப்பீர்—அதான்
சிரேஷ்ட மாய சேர்க்கை நீங்கி [றிச்
சண்டை சச்சரவு மண்டி விளங்கு
நிலையில் இருப்பிரேல் நேர்மையது கெட்டிட
சிறியவோர் செயலும் செய்திடு, மதனால்
நெறிகெடாது நெடுநாள் வாழ்ந்தேன், மற்றினி
படுநாள் எற்கு வருமுன்யான் பகர்மொழி
சேர்ந்த வாழ்க்கையே சீரியவலி" யெனவவ்
வார்ந்த மொழியான் வாழ்ந்தனர் மக்களே.

***

முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.—உலகில் தொழில் செய்யும் நாம் இரண்டுவித விஷயங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. அவை விதி அல்லது ஊழ் என்பதும், முயற்சி அல்லது பிரயத்தனம் என்பதுமே. இவைகளுள் எதன் பலம் குறைந்த போதிலும் நமது காரியம் முற்றிலும் கைகூடாது.

* வரி=கட்டு † வெம்மையோர்=பகைவர். ‡ வீழாத=அழியாத.

ஆனால் விதி என்பது நமக்கு இத்தன்மையது என விளங்காது. ஆதலால் எந்தக்காரியத்திலும் இடையூறுகளைக்கண்டு மனம் அழியாது நாம்செய்யவேண்டிய முயற்சியை விடாது செய்ய வேண்டும். இப்படிச் செய்யும் காலத்திலும், 'விதி எவ்வாறிருக்குமோ? ஆதலால் காரியம் கைகூடியபோதிலும் கர்வப்படக் காரணமில்லை' என்று மனனம் செய்து நமக்கு வரக்கூடிய சர்வத்தை அடக்குவதற்காகவே இந்த விதியை மதிக்கவேண்டுமே ஒழிய, நமது பிரயத்தனத்தைக் குறைக்கும்படி விதியைப்பற்றிய எண்ணத்தைக் கொண்டுவந்து விடக்கூடாது. இவ்வாறு அடக்கத்துடன் முயன்று வருவோமாகில் நாம் இகழ்ச்சி யடைய மாட்டோம் என்ற பொருளை இப்பழமொழி கூறுகின்றது.

இப்பழமொழி முயற்சியுடையார் பெருமை எய்துவர் என்று உடன்பாடாகக் கூறுது, எதிர் மறையாக இகழ்ச்சி அடையார் என்று கூறியிருக்கிறது. இதில் சிறந்த விஷயம் ஒன்று அடங்கியிருக்கிறது. முயற்சிகளை உள்ளபடி செய்து விதியின் வலிமையை மறவாதிருப்பவன் முடிவில் கார்யஸித்தி பெற்றாலும், பெறுவன், பெறுமலிருந்தாலும் இருப்பான் என்பதைக் குறிப்பாகக் காட்டுகின்றது. எப்படி இருந்தபோதிலும் அவனுக்கு இகழ்ச்சி வாராது என்பதே இப்பழமொழியின் கருத்து. இவன் கார்யஸித்தி பெற்றாலோ இவனை எல்லாரும்புகழ்வர். இவனுக்குச்சிறப்பு உண்டாகும். அப்பொழுது இவன் மனமும் சாந்தமாக கர்வப் படாது அசைவற்று இருக்க இவன் ஸுகம் அடைவான். இவ்வாறின்றி இவன் கார்யம் கைகூடாது இருந்து விட்டாலோ, இவன் முயற்சிக்கு எல்லோரும் இவனைப் புகழ்ந்து பேசி விதியின் கொடுமையை நிந்திப்பார். ஆகவே இவனுக்கு யாதொரு இகழ்ச்சியும் வாராது. மேலும் இவன் 'மனத்திலும் ஏதோ, மனிதன் செய்யக்கூடிய முயற்சியைநான் செய்தாய்விட்டது. எனக்குக்கார்யஸித்தி யாகக்கூடாதகாலம் இது ஆதலால் ஆகவில்லை. முயற்சிசெய்ய வேண்டியது நமது கடனே. அது பலிக்கவில்லை என்று கவலைப்படவேண்டியது நமது கடனல்ல' என்று தோன்ற இவன் மனம்தேறியிருப்பான். ஆதலால் இவனுக்குத் தன்மனத்தாலும் உண்டாகும் இகழ்ச்சிகூட வரமாட்டாது. ஆகவேஜயித்தாலும் தோல்வி அடைந்தாலும் முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார். பெருமை வந்தபோதிலும் சிறுமை வந்தபோதிலும் அவர்களுக்கு எவ்வித

இகழ்ச்சியும் ஏற்படாது என்பதே இப்பழமொழியின் உட்கருத்து.

விசுவாமித்ரர் கதை.—இவர் காதிராஜாவின் புத்திரர். ஒருநாள் இவர் காட்டில் வேட்டையாடப் போய் வெகுதூரம் சுற்றிவிட்டு வசிஷ்டாசிரமம் வந்து, வசிஸ்டரைத் தரிசித்தார். வசிஷ்டர் விச்வாமித்ரரது பரிவாரங்கள் உட்பட எல்லோருக்கும் உணவளிப்பதாகச் சொல்ல, விசுவாமித்திரர் எவ்வளவோ தடுத்துப்பார்த்தார். கடைசியில்வசிஷ்டரது வார்த்தைப்படி நடப்பதாக அவர் ஒப்புக்கொண்டார். உடனே வசிஷ்டர் காமதேனுவை அழைத்து இவருக்கும் இவர் பரிவாரங்களுக்கும் பெரிய விருந்து செய்யும்படி ஏவ, விசுவாமித்திரருக்கு வெகு ஆச்சிரியத்தை உண்டாக்கும்படியாகக் காமதேனு அவர்களுக்கு விருந்திட்டது. இதைக் கண்ட விசுவாமித்திரருக்கு இப்பசுவை எப்படியாவது தாம் வாங்கிப் போக வேண்டும் என்ற எண்ணம் வர, வசிஷ்டரை இப்பசுவிஷயமாய் எவ்வளவோ கேட்டுப் பார்த்தார். வசிஷ்டர் இதைக் கொடுக்க உடன்படவில்லை. உடனே விசுவாமித்திரர் காமதேனுவைப் பலாத்காரமாய் அபஹரித்துப்போனார். இதனால் வசிஷ்டருக்கும் விசுவாமித்திரருக்கும் முதலில் விரோதம் உண்டாயிற்று.

இப்படி இழுத்துப் போகப்பட்ட காமதேனு வசிஷ்டரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தன் தேகத்திலிருந்து அநேக வித யுத்தவீரரை உண்டாக்கிவிட, விசுவாமித்திரரது பரிவாரங்களுக்கும் இந்த யுத்த வீரர்களுக்கும் கொடிய போர் தொடங்கியது. இதில் விசுவாமித்திரரது பரிவாரங்கள் யாவும்மடிய, விசுவாமித்திரரும் தோல்வி யடைந்தார். உடனே காமதேனு வசிஷ்டரிடம் வந்து சேர்ந்து விட்டது.

வெகு வெட்கத்தோடும் கோபத்தோடும் தன் ஊர் அடைந்து, தன் பிள்ளைகளுள் ஒருவனுக்கு ராஜ்யாதிகாரம் கொடுத்து விட்டு, பரமசிவனைக் குறித்துத் தபஸு செய்ய வனம் சென்றார். பரமசிவன் பிரத்யக்ஷமாக அவரிடமிருந்து ஸகல அஸ்திர விசேஷங்களையும் அடைந்தார். இவைகளை வைத்துக்கொண்டு, வசிஷ்டரை விசுவாமித்திரர் எதிர்த்துச் சண்டைக்கு வந்தார்.

விசுவாமித்திரர் யுத்தவெறிகொண்டு தம்மை அடிக்க வருவதைக் கண்டவசிஷ்டர் தமது பிரம்ம தண்டத்தைத் தமக்கெதிரில் மந்திரித்து நட்டுவிட்டார். இது விசுவாமித்திரர் விடும் அஸ்திரங்கள் எல்லாவற்றையும் விழுங்கிவிட்டது. கடைசியாகத் தம்மிடம் இருந்த பிரம்மாஸ்திரத்தையும் விசுவாமித்திரர் விட்டுப் பார்த்தார். அதையும் பிரம்மதண்டம் விழுங்கிவிட்டது. உடனே வெகு வெட்கத்தோடு தான் தோல்வி அடைந்ததாக விசுவாமித்திரர் ஒப்புக்கொண்டார். அப்பொழுது 'க்ஷத்திரிய பலம் என்ன பலம்' என்று அவர் மனத்தில்பட, விசுவாமித்திரர் பிராம்மண்யம் ஸம்பாதிக்க உடனே தபஸுக்குப் புறப்பட்டார்.

இராஜ்யத்திற்குப்போகாது தெற்குத்திக்கை நோக்கிச் சென்று அங்கோரிடத்தில் பிராம்மண்யம் ஸம்பாதிக்க அவர் தபஸுக்குத் தொடங்கினார். வெகு காலம் கொடியதவம் செய்தபிறகு, பிரம்மா பிரத்தியக்ஷமாகி, அவருக்கு இராஜரிஷி பதவியைக் கொடுக்க, இது போதாதென்று இவர் மேலும் தபஸு செய்யத் தொடங்கினார். இந்தத் தபசு முடிவு பெறுங் காலத்தில் சண்டாள ரூபத்தோடு திரிசங்கு மஹாராஜன் இந்தத்தவத்தைக் கொள்ளை கொள்ள வந்து தோன்றினான்.

இவன் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த ஓர் அரசன். இவன் ஒருநாள் தனது குல குருவாகிய வசிஷ்டரிடம் சென்று, தன்னைத் தேகத்தோடு ஸ்வர்க்கம் அடையும்படி செய்யும் ஒரு யாகத்தைச் செய்துவைத்து தன்னை ஸ்வர்க்கத்திற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அது அஸாத்தியமான காரியமென்று வசிஷ்டர் சொல்லிவிட, திரிசங்கு வசிஷ்டரது பிள்ளைகளிடம் இதைச் சொன்னான். அவர்களும் தம்மால் முடியாதென்றனர். அப்பொழுது திரிசங்கு வேறு குருவை அடுத்து யாகத்தை நடத்திக்கொள்வதாகச் சொல்ல வசிஷ்டர் பிள்ளைகள் இவன்மேல்கோபங்கொண்டு 'சண்டாளனாகக்கடவாய்' என்று சபிக்கத் திரிசங்கிற்குச் சண்டாளத்வம் வந்தது.

திரிசங்கு தபஸு செய்துகொண்டிருந்த விசுவாமித்திரரிடம் இதைச்சொல்ல, அவர் அவனை, வசிஷ்டரிடம் இருந்த விரோதத்தால், யாகம் செய்துவைத்துத் தேகத்தோடு ஸ்வர்க்கத்திற்கு அனுப்புவதாக ஒப்புக்கொண்டார். உடனே தமது சிஷ்யர்களிடம் ஸகல பிராம்மணர்களையும் இந்த யாகத்திற்கு அழைத்து வரும்படி சொல்லி அனுப்பினார்." அநேக பிராம்மணர்கள் வந்து கூடினார்கள். அப்பொழுது

வஸிஷ்டர் பிள்ளைகள் மாத்திரம் வாராது, "எஜமானன் சண்டாளன், யாகம் செய்துவைப்பவன் க்ஷத்திரியன், இது என்ன யாகம்?" என்று பரிஹாஸமாய்ப் பேசினர். இதனால் விசுவாமித்ரருக்கு அதிகக் கோபம் வர, வஸிஷ்டர் பிள்ளைகள் உடனே இறக்கவேண்டும் என்றும், அவர்கள் பின்பு அநேக ஜன்மம்வரையில் நாய் மாம்ஸம் பக்ஷிக்கும் முஷ்டிகர் என்ற ஜாதியராய் அலைந்து திரியவேண்டும் என்றும் கொடிய சாபத்தைக் கொடுத்தார்.

பின்னர் விசுவாமித்திரர் வந்தவர்களை வைத்துக் கொண்டு யாகத்தைத் தொடங்கி, ஹவிர்ப்பாகம் வாங்க தேவதைகளை அழைத்தார். ஒரு தேவதையும் வரவில்லை. உடனே நெய் எடுக்கும் அகப்பையில் திரிசங்குவை ஏற்றித் தமது தபோபலத்தால் அவனை ஸ்வர்க்கம் நோக்கி அனுப்பினர். திரிசங்கு ஸ்வர்க்கம் அடைந்ததும், இந்திரன் 'நீ இங்கு வர யோக்கியன் அல்லன்' என்றுசொல்லி அவனைத் தலை கீழாகத் தள்ளிவிட்டான். தலை கீழாகவந்த திரிசங்குவை ஆகாயத்திலேயே நிறுத்தி அங்கு விசுவாமித்திரர் தமது தபோமஹிமையால் ஒரு புதிய ஸ்வர்க்கம் சிருஷ்டித்து அவனை அங்கு ஸுகமாய் இருக்கச் செய்தார். இது முடிந்ததும் தமது தபஸு முழுவதும் வீணைச் செலவானது கண்டு, தெற்குத் திக்கைவிட்டு மேற்குத் திக்கை அடைந்து புஷ்கர தீர்த்தத்தின் கரையில் மறுபடி பிராம்மண்யத்தை அடைய தபஸு செய்யத் தொடங்கினர். இங்கும் பின்காட்டப்படும் ஓர் தடை உண்டாயிற்று.

ரிசீகருக்கும், தமது தமக்கையாகிய ஸத்யவதிக்கும் பிறந்த இரண்டாம் பிள்ளையாகிய சுனச்சேபன் என்பவனை, அயோத்தியா நகரத்தரசனாகிய அம்பரிஷ சக்கரவர்த்தி நரபசு யாகத்தில் வெட்டி ஹோமஞ்செய்ய, ரிசீகரிடமிருந்து வாங்கிக்கொண்டு வரும் வழியில்புஷ்கரதீர்த்தத்தில்வந்து இறங்கினன். அங்குத்தமது மாமனாகிய விசுவாமித்திரரைக் கண்டதும் சுனச்சேபனுக்கு அடங்காத்துயரம் வர, தான் நரபசுவாகி உயிரிழக்கப் போகிற கஷ்டத்தை அவரிடம் சொல்லிக்கொண்டான். தமது பிள்ளைகளுள் ஒருவனை விசுவாமித்திரர் சுனச் சேபனுக்குப் பதிலாக நரபசுவாகப் போகச்சொன்னர். அவர்கள் இசையாதது கண்டு, வஸிஷ்டர் பிள்ளைகளைச் சபித்தது போலத் தன்பிள்ளையையும் சபித்துவிட்டு, உடனே அவர் தமது தபோ பலத்தால் இந்திர ஸ்தோத்திரம் ஒன்றைச் சுனச்சேபனுக்கு உபதேசித்தார். சுனச்சேபன், மாமன் உத்தரவின்படி தன்னை வெட்டும் ஸமயத்தில் இதை உச்சரிக்க, இந்திரன் அக்கினி முதலிய தேவதைகள் 'யாகத்தால் திருப்தி அடைந்தோம்' என்றுசொல்லிவிட்டார்கள். உடனே இராஜன் சுனச்சேபனை வெட்டாது விட்டு விட்டான். இவ்வாறு விசுவாமித்திரர் தமது தபோமஹிமையால் ஒருவன் உயிரைக் காப்பாற்றினர்.

இங்கு விசுவாமித்திரர் தபஸு செய்துகொண்டிருக்கையில், இந்திரனால் இவரது தபஸைக்கலைக்க அனுப்பப்பட்ட மேனகை என்ற அப்ஸரஸ்திரி அந்தப் புஷ்கரதீர்த்தத்தில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தாள். இதை விசுவாமித்திரர் கண்டவுடன், அவருக்கு ஆசை உண்டாயிற்று. மேனகையோடு அந்தக்காட்டிலேயே நாள்போவது தெரியாது 10-வருஷம் தபஸைக் கவனியாதிருந்துவிட்டார். அப்பொழுது மேனகையிடம் இவருக்குச் சகுந்தலை என்றபெண் பிறந்தனள். பெண் பிறந்ததும் இவருக்குத் தபஸு கெட்டுப்போனது ஞாபகம் வந்தது. உடனே மேனகையை உதறித்தள்ளிவிட்டு வடக்கிலுள்ள மலைகளில் விசுவாமித்திரர் தபஸு செய்யச் சென்றார். அங்குப் பிரம்மா பிரத்யக்ஷமாகி 'பிராம்மண்யம் வேண்டுமானால் இந்திரிய ஜயம், காமக்குரோதாதிகளின் ஜயம் அதிகமாய் வேண்டும்; கொடியதவம்செய் என்று கட்டளையிட்டு மறைந்தார். விசுவாமித்திரர் கொடியதவம் புரியத் தொடங்கினர்.

இந்தக் காலத்தில் இந்திரனால் ஏவப்பட்ட ரம்பை என்ற அப்ஸரஸ்திரீ மன்மதனால் பின்தொடரப்பட்டு, விசுவாமித்திரரது தபஸைக்கெடுக்கவந்தாள். அப்பொழுது அக்காலத்தில் வஸந்தகாலம் உண்டாயிற்று. புஷ்பங்கள் புஷ்பித்தன. கோகிலாதி பக்ஷிகள் சப்தித்தன. இப்படியிருந்தும் இவைகளால் விசுவாமித்ரரது தபஸ் கலையவில்லை. ஆனால் ரம்பையைக் கண்டதும் விசுவாமித்ரருக்குக் கோபம் வர, அவளை கல்லாகப் போகக்கடவது என்று சபித்தார். இந்தக்கோபத்தால் அவருக்கு தபஸு குறைந்தது. மன்மதன்முதலியோர் பயந்து ஓடிப்போயினர்.

விசுவாமித்திரர் கோபத்தையும் அடக்குவதாகத் தீர்மானித்துக் கொண்டு, கிழக்குத் திக்கை நோக்கிச் சென்று தவம் செய்தார். தவத்தின் முடிவில் பிரம்மதேவர் பிரத்தியக்ஷமாகி, இவரை 'வாராய் பிரம்மரிஷியே' என்றழைத்தார். அப்பொழுது இவர் இதை வஸிஷ்டரும் அங்கீகரிக்க வேண்டுமென, பிரம்மாவின் உத்தரவின்படி வஸிஷ்டரும் அங்குவந்து, விசுவாமித்திரரைப் பிரம்மரிஷி என்று அழைத்தார், அன்றுமுதல் விசுவாமித்திருக்குப் பிராம்மண்யம் வந்தது. அவர் ஓர் கோத்ரப் பிரவர்த்தகரும் ஆனர்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## த்ரௌபதி அல்லது மனத்திணிலை

### 5. உபதேசஞ்செய்த காதை.

நரிக்கும் முயற்கும் கொம்புண்டென்று சிலர் அலைவார்கள். அதைக் கண்டவரில்லை. காண்பதற்குமில்லை. த்ருதராஷ்டிரனுக்கும் நல்லகுணமென்பது முயற்கொம்புதான். அவனுக்கும் தெரியாது விதிவசமாக நல்ல எண்ணம் ஒன்று தோன்றினால் அதைத் தோன்றாது மயங்கச்செய்ய அவன் மைந்தர்களே போதும். தேரேறிச் சென்றார் பாண்டவர் என்று முன் சொல்லப்பட்டது. பின் துரியோதனனது மொழிகளால் பிள்ளைகளிடத்தில் அபிமானத்தால் இழுக்கப்பட்ட ஒழிந்த கண்ணை உடையவனான த்ருதராஷ்டிரன், ஞானக்கண்ணையும் ஒழித்துக் காந்தாரியின் சிறந்தமொழிகளையும் தடுத்துப் பாண்டவரைக் கூப்பிட்டு மறுசூது ஆடும்படி ஏவினான். இதில் தோல்வியடைபவர் பன்னிரண்டு வருஷம் த்ரௌபதியுடன் காட்டிலும், ஒரு வருஷம் மாறுவேஷத்தோடு நாட்டிலும் ஒளிந்து வாழவேண்டுமென்றும் அவ்வாறு வாழுங்காலத்தில் அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் மறுபடியும் பன்னிரண்டு வருஷம் காடடையவேண்டுமென்றும், பந்தயம்கூறப்பட்டது. தருமனும்எதிர்நின்று கூப்பிட்டபிறகுஆடாதிருப்பது அழகல்லவென்று ஆடிதோற்றுத் த்ரௌபதியோடும் காடுசெல்ல ரிஷிவேஷம் பூண்டு நிற்கும் ஸமயத்தில் துச்சாஸனன் வாயில் வந்த கொடுமொழி யெல்லாம் கூற பீமன் என்தமையனது அனுமதியின் பேரில் துர்யோதனன், கர்ணன், சகுனி, துச்சாஸனன் முதலிய யாவரையும் கொல்வேனென்றான். அர்ஜுனன் கர்ணனை அழித்து விடுவேன் என்று சபதம் செய்தான். இச்சண்டாளன் ஜூதமாடிய வட்டு கூரிய அம்பாக அவன்மேற் பாய 'ஹே சகுனி உன்னை நான் உயிர் கொள்வேன்' என்றான் ஸஹாதேவன். நகுலனும் தான் எல்லாரையும்கொல்வேன் என்றான். த்ரௌபதி, "அப்பாதகர்கள் உயிர் நீங்க அவர் ரக்தப்ரவாஹத்தில் புரண்டு புரண்டு வாழ்ந்தாலன்றி அவர் இன்று அவிழ்த்த என் மயிரைக் கட்டுவதில்லை: இந்த ரணகோலத்தையும் நீக்குவதில்லை" என்று கூவினாள். பின்யாவரும் காடடையும் தருணத்தில் குந்தியை வருத்தக்கூடாதென்று விதுரர் கூற அவளை அங்கேயே இருக்கச் செய்தனர். த்ரௌபதியை நோக்கி "குழந்தாய் உனக்கு நான் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. நீ புத்திசாலி 'கஷ்டமடையப்போகிறேன்' என்று கவலைப்படவேண்டாம். கஷ்டமின்றி ஸுகம் கிடையாது. பெண்களின் கடமைகள் முழுவதும் நீ அறிவாய். நான் உனக்கு மறுபடியும் சொல்லவேண்டியதில்லை. உன்னுடைய நடத்தையும் குணமும் எவ்வாறு இருக்கவேண்டுமோ அவ்வாறு இருக்கவேண்டும். பழிக்கிடம் கொடுக்காது வாழ்வாயாக. நீ இருகுலமும் விளங்கவந்த பெருமை வாய்ந்தவள். நான் உங்களுடைய ஸுகத்திற்காக அங்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை த்யானம் செய்துகொண்டே இருப்பேன். கஷ்டத்தைக் கண்டு எந்த ஸ்திரீயின் மனமும் நடுங்கினதில்லை. நீயும் நடுங்காது உன் தருமத்தை நடத்து. நான் உன்னை ஆசீர்வதிக்கிறேன். நன்றாக வாழ்வாயாக. காட்டில் அவர் கஷ்டப்படாமலிருக்கச்செய். ஸஹாதேவனையும் நகுலனையும் ஜாக்கிரதையாகப் பாதுகாப்பாய். அவர் மாத்ரியின் மைந்தர்கள். அவர்கள் கஷ்டத்தால் மயங்கும்படிச் செய்யாதிருப்பது உன் வேலை" என்று குந்தி புத்தி சொன்னாள்.

பின் பாண்டவர்கள் ஸூரியன் தந்த அக்ஷய பாத்திரத்தோடு காட்டில் பல ப்ராஹ்மணர்களுடன் ஸத்கால க்ஷேபம் செய்துகொண்டிருக்கும் ஸமயத்தில் அங்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஸத்தியபாமையோடு வந்து பாண்டவரோடு பேசிக்கொண்டிருக்கையில் ஸத்தியபாமை த்ரௌபதியைத் தேற்றிப் பின் வருமாறு ஏகாந்தமாக அவளோடு பேசினாள்:—"ஹே! த்ரௌபதி! மஹா வல்லவர்களும் பெருந்தன்மை வாய்ந்தவர்களுமான பாண்டவர்களை நீ எவ்விதமாக உன்னுடைய கைக்குள் அடக்கி வைத்திருக்கின்றனை? மலைபோன்ற வலிய உடலையுடைய அவர்களுடைய மனதை எவ்வாறு உன்வசம் செய்துகொண்டாய்? உன்மேல் அவர்களுக்குக்கோபம் வராமலிருக்க நீ என்ன மாயம் செய்தாய்? ஏனடி த்ரௌபதி அவர்கள் நீ சொல்லியவண்ணம் நடக்க நீ என்ன மருந்திட்டனை? நீ எதனால் அவர்களை உன்வசம் செய்துகொண்டாய்? பச்சிலை ஏதேனுமிட்டாயா? யந்திரமேதேனும் கட்டினாயோ? ஜபமேதேனுஞ் செய்கிறாயா? அவர்களுக்குச் சொக்குபொடி யிட்டாயா? அல்லது மந்திர பலத்தினால்

அடக்கிவிட்டாயா? வசீகரசக்தி எதனாலாவது உன் வழிபடச் செய்தாயா? அவர்களுக்கேதேனு மையிட்டு உன்பால் மோஹம் கொள்ளும்படிச் செய்தாயா? உன் அழகிய உருவத்தால் அவர்களை மயக்குகின்றனையா? மூலிகைகளால் அவர்கள் உனக்கு உட்பட்டு நடக்கும்படிச் செய்தாயா? எவ்விதமாகச் செய்தாய்? அவர்களை எவ்விதமாக மயக்கினை? உனக்கு எவ்வாறு அவர்கள் அடங்கி நடக்கிறார்கள்? அப்படி அவர்கள் நடப்பதற்குக் காரணமென்ன? என்னுடைய கணவனை என் வசம் செய்துகொள்ள உபாயம் எது?" என்றாள்.

"ஸத்தியபாமை! நீ கேவலம் புத்தியற்றுக் கீழ்வழியில் நடக்கும் கொடியகுணமே குடிகொண்ட பெண்களின் வழக்கத்தையா கேட்கிறாய்? சீச்சீ! துர்நடத்தையுடைய கீழ்க்குல மாதரின் குணங்களைப்பற்றி நான் எவ்வாறு பேசமுடியும்? அவர்கள் தமது கணவரை வசப்படுத்த யத்னம் செய்யும் கெட்டவழிகளைப் பற்றி நான் எப்படிச் சொல்லக்கூடும். என்னைப்பற்றி இந்தவிதமாக நீ எண்ணுவதாவது கேட்பதாவது அழகன்று. என்னை இவ்வழியில் நடப்பவள் என்று ஸந்தேகித்ததே பெருங்குற்றம். நீயோ நல்ல புத்தியுடையவள். பரந்தாமனாகிய த்வாரகா நாதனுடைய அன்புடைய மனைவி. உனக்கு இந்த மாதிரியாகிய எண்ணங்கள் தோன்றுவது தகுதியல்ல. மருந்தினாலாவது மாயத்தினாலாவது தன்னை வசப்படுத்த ஒரு ஸ்திரீ யத்னப்படுகிறாள் என்று அவள் கணவன் அறிவானாகில் பாம்பைக்கண்ட படைபோல் நடுங்குவன். தன்னை நாசஞ்செய்யப் படுக்கை அறைக்குள்ளேயே காலஸர்ப்ப மிருப்பதாக எண்ணுவன் தன் மனைவியைக் கண்டால் வெறுப்பு கொள்வான். பயங்கொண்ட நெஞ்சையுடையவன் எவ்வாறு மன அமைதி அடைவான்? மன அமைதி இல்லாதவன் எப்படி ஸுகமாக இருக்கமுடியும்? மந்திரத்தால் ஒருநாளும் தன்கணவனை வசப்படுத்த முடியாது. சத்ருக்கள்தான் விஷத்தைப் பக்ஷணங்களிலும் பாலிலுங்கலந்து கொடுப்பார்கள். தங்களுடைய கணவர்களுக்குப் பெண்கள் மருந்திட்டு மாங்கல்யம் வளர்ந்ததுண்டா? தம்முடைய நாசத்திற்கே தாம் ஆளாயிருக்கிறார்கள். அல்லது மருந்திடுவதால் அங்கநஷ்டமாவது உண்டாகும். அல்லது இந்திரியங்களாவது கெட்டுவிடும். மன்மதன்போன்ற அழகனைத் தன் வசப்படுத்த வேண்டுமென்று மருந்து இட்டு அவனை ஊமையாக்கிவிடுவதால் என்னஸுகமடைய முடியும். தமது கணவர்க்குக் கஷ்டமுண்டாகும்படிச்செய்வதா மனைவியின் கடமை? நோய், தள்ளாமை, வயது குறைதல் முதலாகிய கஷ்டங்களைத் தமதுகணவர்களுக்குப்புத்தியற்ற கீழ்க்குணமுடைய பெண்கள் மூலிகைகளால் உண்டாக்குகிறார்கள். கீழ்மை என்னும் பாபமார்க்கத்திலேயே நடந்து அவர்கள் தமது கணவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்குகிறார்கள். மனைவி எனப்பட்டவள் ஏதேனும் துன்ப முண்டாகக்கூடிய காரண முண்டாகும்படி நடந்துகொள்ளலாமோ? அது தகாதல்லவா?

"ஹே! ஸத்தியபாமை! பெருமையிற் சிறந்த பாண்டவர்களிடம் நான் எவ்வாறு நடந்து கொள்கிறேன் என்பதைச் சற்றுக்கேள். வீண்டம்பம், வீண் ஆசை, கோபம் இவைகளில்லாமல், பாண்டவர்கள் அந்நிய பார்யைகளோடிருந்தாலும், நான் அவர்களுக்கு என் மனஃபூர்வமாக வணங்கி நடக்கிறேன். "இது கேவலம்," "இதை நாம் செய்வதா?," "இது நமக்கு அவமானத்திற் கிடமானது," என்று ஒன்றும் எண்ணாது, மனத்திலுண்டாகும் பொறாமையை நாயகர் பால் ஆசை என்னும் ஆனந்தத்தால் தடுத்து அவர்களுக்கு ஊழியஞ் செய்கிறேன். அவ்வாறு செய்வது எனக்கு மானக்கேடு என்று நான் எண்ணவில்லை. சந்திரன்போல் குளிர்ந்த தன்மையும், ஸூர்யன் போல சோபையுங்கொண்ட மைந்தர்களிடம், அவர் எதிர்நின்று நான் ஒன்றும் பேசமாட்டேன். அவர்கள் கோபித்துக் கொண்டாலும் பதில் சொல்லேன். அவர் மனத்துக்கு வெறுப்பு வரக்கூடிய மொழி ஒன்றும் வரவிடேன். அவர்களை அவமதிக்கத்தக்க செய்கை ஒன்றும் செய்யமாட்டேன். எதிரில் உட்காரமாட்டேன். அப்படி இருந்தாலும், நிற்பதால் அவர்களை அலக்ஷியம் செய்ததாகத் தோன்றும்படி ஒன்றும் செய்யேன். அவர்கள் எதிரில் தடதடவென்று நடக்கமாட்டேன். தேவதைகளாயிருந்தாலும் ஸரி, மனிதர்களானாலும் ஸரி, அவர் செல்வத்தில் மிகுந்திருந்தாலும், அல்லது அழகிற் சிறந்திருந்தாலும், அல்லது இரண்டாலும் உயர்ந்திருந்தாலும், என்னுடைய கணவரன்றி, மற்றவரிடம் என் மனம் இழுக்கப்படாது. மற்றையோர்களை நான் லக்ஷியம் செய்வதில்லை. எனக்கு என் கணவரே லக்ஷ்யம். கணவனுக்கு முன் ஒன்றையுமுண்ணமாட்டேன். எனக்குப் பசியாயிருக்கிறதென்னும் எண்ணமும் எனக்குத் தோன்றுவதில்லை. கணவர் உண்டு மற்றையோரும் உண்டபின்

தான் நான் உண்பது. வெளியிலிருந்து வந்தாலும், காடு அல்லது நாட்டில் ஸஞ்சரித்து வீடு வந்து சேர்ந்தாலும், அல்லது எப்பொழுதாவது அவஸரமாக எழுந்தாலும் அவர்களுக்கு உபசாரஞ் செய்து கால் கழுவி ஆஸனமிட்டு மறு வேலையைப் பார்ப்பேன். வீட்டையும், வீட்டிலிருக்கும் ஸாமான்களையும் பார்க்க மனத்திற்கு ஸந்தோஷமுண்டாகும்படி அமைத்து வைப்பேன். உணவும், உணவிடும் பாத்திரங்களும் ஸுசிகரமாகவும், கண்ணிற்கும் மனத்திற்கும் ஸந்தோஷமூட்டும்படியாகவும் வைத்து ஜாக்கிரதையாக அவர்களுக்கு அவர் விரும்பிய காலத்தில் பயபக்தியோடு அன்னம் இடுவேன். நான் எப்பொழுதும் கோபங் கொள்வதில்லை. நம்மை யவர் வைதாலும் ஆசீர்வதித்ததாகவே எண்ணுவேன். அவர் கோபத்திலேதாவது தவறிச் சொல்லினும் "அப்படி என் சொன்னீர்" என்று வாக்குவாதம்செய்து வார்த்தைப் பந்தலிடுவதில்லை. அவர் கோபத்தோடு சொன்ன மொழிகளில் நமக்குப் புத்தி வரவேண்டியதற்காக இருந்தால் அதை உடனே மனத்தில் பதித்துக்கொண்டு மறுநாள் அவ்வாறு சொல்லாதிருக்கும்படி செய்துகொள்வேன். ஒருவேளை தவறாக ஏதேனும் சொல்லிவிட்டால் ஒரு காதால் வாங்கி மற்றொரு காதால் விட்டுவிடுவேன். உடனே மறந்துவிடுவேன். அவ்வாறு சொன்னதை நான் கவனித்ததாகவே காட்டிக்கொள்ள மாட்டேன். நான் அந்நியரோடு பேசுவதில்லை. வீண் வம்பிற்கு இடமே கொடுப்பதில்லை. நான் கெட்டியாகவும் பேசுவதில்லை. கெட்ட பெண்களின் நடத்தையைப் பார்த்து நடப்பதே யில்லை. அதை அப்பியஸிப்பது எப்படி முடியும்? அவர்களோடு கூடுவதுமில்லை, வீட்டுவாசலில் வந்து நின்றுகொண்டு வேடிக்கைப்பார்ப்பதில்லை. ப்ரக்ஷாளனம் முதலியன செய்யுமிடங்களில் காலத்திற்குமேல் தங்குவதில்லை. இல்லாவிட்டால் ஸந்தேஹத்திற் கிடமாகும். வீட்டைச்சார்ந்த தோட்டங்களிலும் தங்கிவிளையாடுவதில்லை. என்னை அவர் பரிஹாசம்செய்தால் சிரிப்பதேயன்றி வேறெதற்கும் நான் சிரிப்பதேகிடையாது. அப்படிச் சிரித்தாலும் ஓசையுண்டாகும்படி சிரிக்கமாட்டேன். அவர்கள் குற்றமென்று எண்ணக் கூடியவைகளை எல்லாம் ஒழித்து விடுவேன். அவர்களுக்கு ஊழியஞ் செய்வதே என்வேலை. மற்றென்னவேலை எனக்கு வேண்டியது? அவர்கள் எங்கேனும் என்னை நீங்கிச்சென்றால், மயிரில் மலரிடேன். நகைகள் அணியேன். சந்திரனைக் கண்ட தாமரைமலர்போல் என் முகம் சுருங்கிவிடும். எனக்கு அவர் வரும் வரை அவர்கள் ஸுகமாக இருக்கவேண்டுமென்று கடவுளை த்யானம் செய்வேன்; வேறொன்றுஞ்செய்யேன். என் கணவர் உண்ணாததை நான் உண்ண மாட்டேன், அவர் எண்ணாததை நான் எண்ணமாட்டேன். அவர் காணாததை நான் காணேன். அவர் வெறுத்தவரை நானும் வெறுப்பேன். அவர் பூஜிப்பவரை நானும் பூஜிப்பேன். அவர் பேசாதவர்களோடு நானும் பேசேன். அவர் விரும்புவதையே நான் விரும்புவேன். எனது கணவர்களுடைய ஸுகத்தையே நான் என்றும் பார்க்கும் தன்மையுடையவள். என் ஸுகம் எனக்குவேண்டியதில்லை. அவர் ஸுகமே எனக்கு முக்யம். என் மாமியார்கூறியவிதமே எனது சுற்றங்களிடம் நடந்துகொள்வேன். அவர் கூறிய விதமே அதிதிபோஜனம், பித்ருபூஜை முதலிய இல்லறதர்மத்தைச் செய்வேன். அவருடைய உத்தரவின்றி ஒருநாளும் ஒருவேலையும் செய்யமாட்டேன். இரவும் பகலும் ஒழிவின்றி வேலைசெய்வேன். சோம்பலடையமாட்டேன். கேவலம் அற்ப ஸமாசாரத்திற்கு பாம்புபோல் சீறுவார்கள் என்னும் பயத்தோடே யான் வணக்கத்துடன் என் கணவர்களுக்கு வேலை செய்வேன்.

"என்னுடைய அபிப்பிராயம் என்ன என்றால் பெண்கள் தமது கணவனையே எல்லாவற்றிற்குஞ் சார்ந்து ஒழுகவேண்டியது. பெண்கள் தம் கணவரையே கடவுகளாகப் பாவிக்கவேண்டும். அவளுக்கு அவனன்றிவேறுகதியில்லை. அப்படியிருக்க அவனுக்கு அவள் த்ரோஹம் செய்வது அழகா? நியாயமா? செய்யலாமா? நான் எப்பொழுதும், நடந்தாலும், படுத்தாலும், பேசினாலும், தூங்கினாலும், ஸந்தோஷித்தாலும், வேலைசெய்தாலும், எப்படி இருந்தாலும் என்னுடைய கணவரது இஷ்டத்திற்கு விரோதமாக நடப்பதே கிடையாது. என் மாமியாரைப்பற்றிக் கொஞ்சமும் தூற்றுவதே கிடையாது. நான் நடக்கின்றவிதத்தாலும், என்னுடைய பணிவிடையினாலும், வணக்கத்தாலும் கனிந்து மனமுருகி எனது கணவர் என்பால் ஆசைகொண்டு விளங்குகிறார்கள். பக்தர்களிடத்துக் கடவுளருள் மலர்வதுபோல் என்மேல் அவர்களது கிருபாநோக்கம் பரிபூர்ணமாக இருக்கின்றது.

"என் மாமியார் உண்டபின்னன்றி நான் உண்ணுவதில்லை. அவருடைய வஸ்திரங்களைத் துவைத்து உலர்த்தி சுத்தமாக எடுத்துவைப்பேன். என் கணவரது தாயாகிய குந்தியை ஒருநாளும் கஷ்டப்படப் பார்த்து நான் ஸஹிக்கேன். வயது முதிர்ந்த அவர் கஷ்டப்பட நான் பார்ப்பது எனக்கு அழகா? அவரைக் காட்டிலும் ஸுகம் படவும் எனக்கு எண்ணமில்லை. அவரை ஸுகப்படுத்த வேண்டிய விதங்களிலெல்லாம் ஸுகப்படுத்தி நான் ஆனந்தப் படுவேன். தன்னை வெட்டுவார்க்கு இடம் கொடுக்கும்பூமாதேவி போல் பொறுமை வாய்ந்த என் மாமியாராகிய குந்தியம்மாளை ஒருநாளும் வாய் தவறியும் ஓர் தவறான மொழி கூறியதில்லை. அவரை ஓர் தெய்வமாகப் பாராட்டி நான் சீராட்டுவதே யன்றிப் பொறுமைக்கிடம் கொடுக்கவேண்டிய ஆளாக நான் எண்ணாதி

ருப்பதே எனக்கு ஸுகத்தை யளிக்கின்றது.

"இந்த்ரபிரஸ்தத்தில் ராஜ்ஜியமாண்ட காலத்தில் கணக்குகளையெல்லாம் பரிசோதிக்கும் வேலைக்காரியாக விளங்கினேன். ராஜ்யபாரத்தின் கவலைகளை என் முதுகின்மேலும் கொஞ்சம் சுமந்து என் கணவரது சுமையைக் குறைக்க முயன்றேன். அவர் கஷ்டத்தை நீக்குவதிலேயே கவலையாக இருந்தேன். என்னைப்பற்றி சிறிதும் கவலையும் படவில்லை. கவலைக்கிடமும் கொடுக்கவில்லை. இரவும் பகலும் ஆஹாரம் நித்திரை இரண்டையும் விட்டுவிட்டு அவர்களைக் காப்பதே விரதமாகக் கொண்டேன். எல்லார்க்கும் முன் எழுந்து எல்லார்க்கும் பின்தான் நான் படுக்கையைப் பார்த்து படுப்பது. இது எப்பொழுதும் என்னுடைய வழக்கம்.

"இவ்விதம் நடந்துதான் என் கணவர்கள் என் கருத்துக்கிணங்கினார்கள். ஒருநாளும் மருந்துமாயம் மூலிகை முதலானவைகளை யான் கண்டதில்லை" என்று த்ரௌபதி சொன்னாள்.

இதைக்கேட்டதும் ஸத்தியபாமை நடுநடுங்கி "அம்மா! நான் சொல்லியது தவறு. என்னை மன்னிக்கவேண்டும். நேச ஸ்வபாவத்தால் முன்னாலோசனை இல்லாமல் சொல்லிவிட்டேன். இது பெண்களுக்கு ஸஹஜம்" என்றாள்.

என்றதும் த்ரௌபதி "இப்பொழுது ஒரு வழி காட்டுவேன். அந்த வழியில் நீ நடப்பாயானால் கண்ணபிரானது களங்கமற்ற ஹ்ருதயம் உன்னால் இழுக்கப்படும். ஸத்தியபாமை! கணவனைப்போன்ற கடவுளை எவ்வுலகம்தரும்? எவ்வுலகங்களிலும்கணவனைப்போன்ற கடவுளுமுண்டோ? உன்பக்தியினால் அவனது அன்பை அடைந்து விட்டால் உனக்கெது தான் கிடைக்காது. அன்பினாலாதரித்தால் மோக்ஷமும் கிடைக்கும். சிறிது கோபங்கலந்தால் முழுதும் கெட்டுவிடும். ஜாக்ரதை! கோபம் சண்டாளம். அதனால் நீ எல்லாவற்றையும் துறந்துவிடலாம். கணவனிடத்திலிருந்தல்லவா மனைவி புத்திரப்பேறு அடைகிறாள்? ஸந்தோஷத்தை யூட்டும் பலபொருள்களையு மடைவது அவனிடத்திலிருந்து அல்லவா அடைகிறாள்? அவனிடத்தி லிருந்தல்லவா, ஸுகத்துடன்படுக்கஇனியபடுக்கையும், நிற்கநிழலும், கட்ட ஆடையும் அணிய நகைகளும், பூச்சும், பெருமையும் அடைகிறாள்? மோக்ஷமுமவனாலல்லவா அவளுக்குக் கிடைக்கின்றது? ஸுகமென்றால் சும்மாகிடைத்துவிடுமோ? பாத்தியில் விதைத்துப் பயிராகவில்லை? கற்புடைய ஸ்திரீ கஷ்டமில்லாமலெப்படி இருக்க முடியும்? உள்ளன்பு, நேசம், இவைகளால் கண்ணனைப் போற்றி யுழைத்தாலன்றி ஸுகமடைவதசாத்தியம். உண்மைப்பாசம் உன்னிடமிருந்தாலன்றிக்கண்ணன் உன்மேல் ஆசைகொள்வது எவ்விதம்? நீ செய்யும் செயல்களாலும், நடைநொடி பாவனைகளாலும் பரந்தாமனுக்கு உன் மேல் ஆசை உண்டாகும்படி செய்யவேண்டிய துன்கடமை. கணவனுடைய குரல் தெருவில் கேட்டதும், எழுந்திருந்து அவரை எதிர்கொள்ள சித்தமாக இரு. உள்வந்ததும் கால் கழுவி வணங்கு. ஆசனமிடு. நல்லமொழி கூறு. யாரையேனும் "இதைச்செய்" என்று அவர் சொன்னால் அது உனக்குச்சொல்லியதாக எண்ணி உடனே சென்று அவ்வேலையை முன்செய். உனக்குச்சொல்லவில்லையே என்று தாமதித்து நிற்காதே. காலாவிட்டவேலையைத் தலையாலே செய்ய சித்தமாயிரு. உன்மனஃபூர்வமாக அவருக்கூழியம் செய். உன்னுடன் அவர் கூறிய மொழியை வெளியே சொல்லாதே. அவன் மானத்தை வாங்க வெளியில் வரவேண்டாம். உன் கணவனுக்கு யார் யார் வேண்டுமோ அவர்களை ஸந்தோஷப்படுத்து. அவர்களை உனக்குக் குருவாக நினைத்து நட. உன் கணவனுக்கு ஆகாதவர்களோடு சேராதிரு. அவருக்குத் துன்பஞ்செய்ய விரும்புவாரது கூட்டத்தில் கலக்கவேண்டாம். புருஷர்கள் முன் நில்லாதே. மெதுவன்றிப்பேசாதே. கள்ளம்செய்வாரோடுகலவாதிரு. தனியாக உன் பிள்ளையோடும் இருக்கலாகாது. நற்குலத்திலுதித்து நல்லகுணமும் ஒழுக்கமும்கூடியவர்களோடுமாத்திரம் பழகு. கற்பிற்சிறந்து, கணவன் வழிபாடுகொண்ட பெண்களையேநேசி. கோபம், நிஷ்டூரம்கொடுமொழி முதலியன உடையவர்களோடு பழகாதிரு. வஞ்சகம், பொய், நாயகத்ரோஹம்முதலிய பாபங்களில் வளர்வோர்களைத் தடுத்து விடு. அவர்களோடுபேச்சை விட்டுவிடு. வம்பிற்கிடம் கொடேல். என்றைக்கும் ஒரேநிதானமாக இருப்பவரோடு கலந்துவாழ். இன்றைக்கொரு கோலம் மறுநாள் பாழ்ங்கோலம் கொள்வாரோடிணங்க வேண்டாம். உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு. மிதமிஞ்சி உண்ணவேண்டாம். முகத்தில் கோபமரும்பாது விகாரப்படாது பாதுகார். கணவனைக் கண்டதும் அக்கண்களிலிருந்துஆனந்தத்தை வழியவிடு. உன்னைக்கண்டு கணவன்ஆசைகொள்ளநகைகளை அணி. பிறர்க்காகவாவது, பிறர் பார்ப்பதற்காவது அணியவேண்டாம். வாய் பதட்டம், எதிர்மொழி, மெதுவின்மை இவைகளை ஒழி. நன்மை முயல். கணவனுக்கு ஸுகத்தை நாடு. அதற்கு உன் உயிரையும் கொடு. உன்னைப் பற்றி எண்ணாது அவனது ஸுகத்தையே விரும்பு, அதனால் இங்கும் ஸுகமுண்டு. மேலும் மோக்ஷமுண்டு. இதுதான்நான் சொல்வது. இவ்வாறு நான் சொல்வதை ஒரு காதால் வாங்கி மறு காதால் விடாது மனத்தில் பதித்து, ஒழுங்காக நட. கண்ணன் உன்மேல் ஆசை கொள்ளாதிருக்க முடியாது. உனதன்பு என்னும் வலையில் அகப்பட்டுச் சிக்கிக்கொள்வான்" என்று சொன்னாள்.

இதற்குள் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அங்குத்தோன்ற இருவரும் பிரிந்தனர்.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

லார்டு ஹார்டிஞ்சு.—நமது புதிய ராஜப்பிரதிநிதியாகிய லார்டு ஹார்டிஞ்சு நவம்பர்மீ 21உ லார்டு மிண்டோவிடமிருந்து தமது வேலையை ஒப்புக்கொண்டார். இவர் பம்பாயில் ஸ்டீமரிலிருந்து இறங்கியவுடன் பம்பாய் கவர்னரால் வரவேற்கப்பட்டார். உடனே பம்பாய் முனிஸிப்பாலிடி, மகம்மதிய சங்கம், பம்பாய் வர்த்தகச்சங்கம், சுதேச வர்த்தகச் சங்கம், ஆகிய இச்சங்கங்கள் நல்வரவுப் பத்திரிகைகள் வாசித்தன. அப்பத்திரிகைகளுக்கு, லார்டு ஹார்டிஞ்சு தக்கவாறு விடை கூறினர். இவர் பேசியதிலிருந்து, இந்தியாவுக்கு நன்மை புரியத் தம்மாலியன்றமட்டும் முயலுவதாக இவர் எண்ணங் கொண்டிருக்கிறாரென்று நாம் அறிகிறோம். இவர்எண்ணம் முற்றிலும்நிறைவேறும்படி கடவுள் கிருபை செய்யுமாறு யாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.

***

நமது சக்கிரவர்த்தி.—நமது மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்கிரவர்த்தியவர்கள், 1912-ம் வருஷம் ஜனவரிமீ 1உ இந்தியாவிற்கு வந்து டில்லிநகரத்தில் முடிசூட்டும் வைபவத்தைக் கொண்டாட ஒரு தர்பார் நடத்துவார்களென்று, இந்தியா கவர்ண்மென்டார் பத்திரிகைகளில் தெரிவித்திருக்கிறார்கள். இச்செய்தியைக் கேட்க இந்தியா முழுவதுங் களிப்புறுமென்பதற்கு ஐயமில்லை. ஏனெனின் இதுவரையில், நமது நாட்டிற்குச் சக்கிரவர்த்தியாவது, சக்கிரவர்த்தினியாவது இராஜ்ய பாரத்தை வகித்தவுடன் வந்ததில்லை. இதுவே முதல்தடவை.

***

இந்து மதத்திற்குத் திரும்பி விட்டார்கன்.—மிஸ்கிர் குலாம்பாய் நிச்சாபாய் என்பவரும் அவர்மனைவியாரும் ஐந்து வருஷங்களுக்கு முன்னர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்து, இப்போது இந்து மதத்திற்குத் திரும்பிவர விருப்பங்கொண்டதால், புரோச் என்னுமிடத்திலுள்ள ஆரியசமாஜத்தார் அவர்ளுக்குப் பிராயச்சித்தம் செய்து வைத்தார்கள். மிஸ்டர் குலாபாய், இந்துமதத்தின் உயர்ந்த கருத்துக்களையும் கொள்கைகளையும் கொஞ்சமும் அறியாமல் கிறிஸ்தவ மதத்திற்குச் சென்றாரென்றும், பிறகு ஆரியசமாஜத்தார் நமது ஆரியமதத்தின் மகிமைகளை வெகு அழகாய் எடுத்துக்காட்ட அவைகள் அவர்மனத்தில் ஊன்றிப் பதியும்போதெல்லாம்அவர் செய்த காரியத்திற்காகத் தீராத் துக்கங் கொண்டவராய்ப் பின்னர்ப் பழைய தெய்வீக மதத்திற்குமனந் திரும்பிற்றென்றும் தன்னைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் விவரமாகச் சமாஜத்தின் முன்புஎடுத்துரைத்தார்.

நாய்களுக்குப் போலிசு வேலை.—வங்காள அரசாட்சியார் பொலீசாருக்குதவியாய் நாய்களைப் பழக்கிக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்காக இங்கிலாந்திலிருந்து வேட்டைநாய்க் குட்டிகளையழைப்பிக்கிறார்கள். கள்வர் முதலான குற்றவாளிகளை யுபாயமாய்ப் பிடிப்பதற்கு இந்த நாய்கள் ஏற்றபடி பழக்கப்படுமாம்.

தாரம்பூரில் க்ஷயரோகிகளுக்குச் சுக வாசஸ்தலம்.—தாரம்பூர் என்ற இடத்தில் எட்வர்ட் ஞாபகச் சின்னமாய் க்ஷயரோகிகளுக்கு மிஸ்டர் மலபாரியால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சுக வாசஸ்தலத்துக்கு (Anatorium) பாடியாலா மகாராஜா லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார். அவ்வளவு தொகை பொருளுதவி செய்திருப்பதும் தவிர அந்தச் சுக வாசஸ்தலத்தை யொட்டி ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்துவதாயும் சொல்லியிருக்கிறார். அதிலேயே இருந்து வைத்தியம் பார்த்துக்கொள்ள இஷ்டமுள்ளவர்கள் பார்த்துக்கொள்ளலாம். அப்படி இஷ்டப்படாதவர்களுக்கு மருந்து கொடுக்கப்படும். அந்தச் சுக வாசஸ்தானத்தை மேற்பார்வை பார்ப்போர்கூட பாடியாலா சமஸ்தானத்திலிருந்து சகல விதமான சாதகங்களையும் பெறுவார்களெனப்படுகிறது.

***

இருதலைப் பையன்.—பாட்ணா என்னும் நகரத்தில் ஒரு அதிசயமான ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு இரண்டு கழுத்துகளும், இரண்டு தலைகளும் இருக்கின்றன. ஒவ்வொரு தலையின் அங்கங்களும் சரியாகவே இருந்தன. சென்ற மாதம் 19-ந்தேதி இரவு இரண்டு மணிக்குப் பிறந்தது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் குழந்தை இறந்துபோய் விட்டது.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை.—நமது புதிய வைஸிராயாகிய லார்டு ஹார்டிஞ்சின் பாட்டனார் இந்தியா கவர்னர் ஜெனரலாக இருந்தபோது ஞாயிற்றுக்கிழமை பப்ளிக் விடுமுறை நாளாக இந்தியா முழுவதும் அனுசரிக்கப்பட வேண்டுமென்று பகிரங்கம் செய்தார். இதனை அநேகர் அறிந்திருக்கமாட்டார்கள்.

ஒரு ஆச்சரியமான ஜோதி.—பெகுவிலுள்ள ஷிடாமாபையா கோவிலின், சிகரத்தில், இராக்காலங்களில், அடிக்கடி வெகுபிரகாசமான ஜோதியொன்று தோன்றிபார்ப்பவர்கள் மனதைக் கவரச் செய்துகொண்டிருக்கிறதாம். பையாகோவில் சிகரத்தில், ஜனங்கள் போவதற்கு முடியாதாம். அப்படியிருக்க, இராக்காலங்களில் சிலவேளைகளில் இவ்வித ஜோதியுண்டாவதைப் பார்க்க ஆச்சரியமாகத்தானிருக்கிறது. ஏராளமான பர்மியர்கள் தினந்தோறும் போய் வேடிக்கைப்பார்த்து வணங்கி வருகின்றனராம். இச்சோதி தோற்றுவதின் காரணம் ஒன்றும் தெரியவில்லை.

## சிறிதுகாலத்திற்கு விலை குறைக்கப்பட்டது

அறுபத்துமூவர் சரிதங்களடங்கிய

# பெரிய புராணம்

### மூலமும், அரும்பதவுரையும், வசனமும்

இந்நிலவுலகத்தில் ஆன்ம நாயகனை யடைய பலவித நெறிகளிருப்பினும் அவைகளுள் சிறந்தது பக்தி நெறியேயாகும். இதனைப்பற்றி விரிவாகக் கூறும் பதி நூல் பெரியபுராணம் ஒன்றே.

இப்பெரியபுராணத்தை உரையோடு 19 ரூபாய்க்கும், மூலம்மாத்திரம் 3-ரூபாய்க்கும் விற்கின்றமையால் எளியவர் எளிதில் பெற முடியவில்லை. ஆனது பற்றி இந்நூல், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் பிரதிக்கிணங்கப் பரிசோதித்த மூலத்தோடு அரும் பதவுரையும், வசனமும் சேர்த்து உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் டிம்மி 109-பாரம் அல்லது 872-பக்கங்கள் கொண்ட புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. இடையிடையே தேவாரங்களுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. இளங்கல்வியுடைய சிறுமியர்களும் வாசித்து எளிதில் பத்திச் சுவையை யுணர்ந்து களிப்பார்கள். இதுபோன்ற பிரதி இதுகாறும் வெளிவந்ததில்லை யென்பதை இதனை வாங்கி வாசிப்போர் உணர்வர். உயர்ந்த கலிகோ பயிண்டு செய்து தயாராயிருக்கிறது. சொற்ப காபிகள் விற்பனைக்கு இருக்கின்றமையால் வேண்டியவர்கள் ஆர்டர் சீக்கிரம் அனுப்பவேண்டியது.

விலை ரூ. 3 0 0

சிறிதுகாலத்திற்குச் சந்தாதார்களுக்கு மாத்திரம் ரூபா. 2 க்குக் கொடுக்கப்படும்.

திருமந்திரம்.—மூவாயிர வருடஞ் சிவயோக மிருந்து ஒவ்வோராண்டிற்கு ஒவ்வோ ரருட்பாவாகத் திருமூலநாயனாரவர்களால் அருளிச்செய்யப்பட்டது. தனைபிரித்திருக்கிறது. அரும்பாக்கட்கு நக்ஷத்திரப் புள்ளியிட்டிருக்கிறது. திருமூலநாயனார் கலர்படம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த காகிதத்தில் (24 lbs Double Foolscap) அச்சிடப்பட்டிருக்கிறது. (F. Cap.) 59½-பாரம் அல்லது 476-பக்கங்கள் உடையது. கலிகோ பயிண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 1 8 0

| | | | |
|---|---|---|---|
| கந்தபுராணச் சுருக்கம் மூலமும், பொழிப்புரையும், விருத்தியும் ... ... | 2 | 8 | 0 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் ... | 0 | 6 | 0 |
| சேக்கிழார்சுவாமி புராணம், திருமுறை கண்ட புராணம் முதலியன ... | 0 | 4 | 0 |
| கபிலரகவல் ... ... ... ... | 0 | 0 | 6 |

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி

மைலாப்பூர் மதராஸ்.



## வியாசப்ரகாசிகை

A guide to Essay-writing in Tamil

இப்புத்தகம் வியாசம் எழுதப் பயிலும் ஒவ்வொரு மாணாக்கர்களிடத்திலும், பிரசங்கம் செய்யப் பழகுவோர்களிடத்திலும் அவசியமாயிருக்கவேண்டியது. இது சிறுவர் சிறுமியர் யாவரும் படித்தறியக் கூடிய எளியநடையில் எழுதப்பட்டுள்ளது அநேக தமிழ்ப் பண்டிதர்களாலும் தலைமை உபாத்தியாயர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது.

விலை அணா 8. தபால் சார்ஜ் பிரத்தியேகம்

புஸ்தகம் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

P. S. APPUSAWMY IYER

107, Big Street,

Triplicane.



## நீதிநூற்றிரட்டு விருத்தி யுரை

(1-ம் வால்யம்) விலை ரூபா 1-2-0.

இதில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், உலகநீதி, நல்வழி ஆகிய இந்நீதிநூல்களுக்குப் பதவுரை, கருத்துரை, விருத்தியுரை, திருக்குறள் மேற்கோள்கள், ஆங்காங்குள்ள பாடபேதங்கள், ஔவையார் சரித்திரம் முதலியவை இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் 364-பக்கம் கொண்டுள்ளது.

(ஷை 2-ம் வால்யம்) விலை ரூபா 1-2-0.

இதில் வெற்றிவேற்கை, இனிது நாற்பது, இன்னா நாற்பது, சிறுபஞ்சமூலம், நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி ஆகிய இவைகளுக்கு 1-ம் வால்யம் போல் விருத்தியுரை முதலியன செவ்வனே எழுதப்பட்டுள்ளது. இது 400 பக்கமுடையது.

டி. எஸ். குமாரசுவாமி பிள்ளை, .

20, அவதானம் பாப்பையர் இரண்டாம் சந்து,

சூளை, சென்னை.